பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 30, செவ்வாய்க்கிழமை 15.11.2016 | கதிர் 10

பாரம்பரிய உயர்தர (இந்திய)
சைவ உணவகம்
யாழ் சுவையூற்று
இல.369, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொ.பே.: 0772335103

# தீர்வு எத்தகையது என்பது 2016 இற்குள் அனைவருக்குமே பகிரங்கமாகிவிடும்!

## நேற்று கிளிநொச்சியில் வைத்து சுமந்திரன் அறிவிப்பு

– கிளிநொச்சிச் செய்தியாளர் :- மு.தமிழ்ச்செல்வன் –

கிளிநொச்சி, நவ.15

"அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக, ஆட்சிமுறை சம்பந்தமாக எத்தகைய தீர்வு வரப்போகிறது என்பன பற்றிய விடயங்கள், அரசமைப்புச் சபையின் வழிகாட்டல் குழுவின் 2ஆவது இடைக்கால அறிக்கை டிசெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் வெளியாகும் போது பகிரங்கமாகி விடும்.

"எனவே தீர்வுத் திட்டம் எப்படி அமையும் என்பது 2016ஆம் ஆண்டு முடிவதற்குள் தெரிந்து விடும்".

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

அரசியல் கைதியான விவேகானந்தனூர் சதீஸின் நூல் வெளியீட்டு விழாவும், மற்றொரு நூல் அறிமுக விழாவும் நேற்று மாலை கிளிநொச்சியில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பக்கம் 19 »

அளப்பு அருணாசலம்



சுமந்திரன் எண்டால் சும்மாவோ...? காலக்கெடுவைக் கணக்குப் போட்டுச் சமாளிக்கிறார் பாருங்கோ...! ஐயாவுக்கு ஏற்ற நல்ல பையாதான்...!

# ஒற்றையாட்சியும் இல்லை சமஷ்டியும் கிடையாது!

## நாட்டின் கட்டமைப்புக் குறித்து புதிய அரசமைப்பில் வேறு சொற்றொடரில் விவரிப்பதற்கும் தீர்மானம்

கொழும்பு, நவம்பர் 15

**நல்லாட்சி அரசின் உத்தேச புதிய அரசமைப்பில் நாட்டின் கட்டமைப்புக் குறித்து 'ஒற்றையாட்சி' என்ற பதமோ அல்லது 'சமஷ்டி முறைமை' என்ற சொல்லோ கிடையாது.**

**அதற்குப் பதிலாக அவ்விடயம் குறித்து வேறு சொற்றொடரில் அமைந்த ஒரு விவரிப்பு இருக்கும்.**

**-இவ்வாறு புதிய அரசமைப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் 'காலைக்கதிருக்'குத் தெரிவித்தன.**

உத்தேச புதிய அரசமைப்பில் நாட்டின் கட்டமைப்பு எத்தகையதாக அமைய வேண்டும் என்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்தாலோசித்து அரச உயர்மட்டம் ஒரு தீர்மானத்துக்கு ஏற்கனவே வந்துவிட்டதாக அந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

திட்டவட்டமானதீர்மானம் ஒன்றை அரசு எடுத்ததன் பின்னரே அது தொடர்பில் சில தீர்க்கமான கருத்துக்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றார் எனவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

"நாட்டில் 'சமஷ்டி ஆட்சி முறைமை' என்றால் தென்னிலங்கை மக்கள் சந்தேகம் கொள்கின்றார்கள். அதேபோல 'ஒற்றையாட்சி முறைமை' என்றால் அது தமிழர்களுக்குக் கசக்கின்றது. எனவே இரு தரப்பினரையும் திருப்திப்படுத்தும் ஒரு தீர்வை நாம் எட்ட வேண்டும்." – என்று கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற தேசிய நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருக்கிறார்.

அதனையே பின்னர் சில தினங்களுக்கு முன்னர் 'த ஹிந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியிலும் ஜனா

பக்கம் 20 »

## தென்னை முறிந்ததால் அச்சுவேலியில் மின் தடை

அச்சுவேலி, நவ.15

அச்சுவேலி – தொண்டைமானாறு பிரதான வீதியில் மின்சாரக் கம்பிகள் மீது தென்னை மரம்

பக்கம் 20 »

## மல்லாவியில் நேற்று மின்னல் தாக்கி விவசாயி பலி! மற்றையவர் படுகாயம்

முல்லைத்தீவு மல்லாவிப்பகுதியில் தனது வயலில் வேலை செய்து கொண்டிருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான விவசாயி ஒருவர் நேற்று மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி பலியானார். மற்றுமொரு விவசாயி காயமடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பக்கம் 20 »

## வளலாயில் நேற்று வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.15

வளலாய் மேற்கில் கடந்த 2011 ஆம் ஆண்டு மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட இடத்தில், தோட்டக் காணி ஒன்றில் இருந்து நேற்று திங்கட்கிழமை காலை ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

டெமோ 04, பராலைட் 06, கைக்குண்டு 08, மகசின் 20,

பக்கம் 20 »

## நெல்லியடியில் நேற்று விபத்து கணவன் பலி; மனைவி தப்பினார்

வடமராட்சி, நவ.15

நெல்லியடி சோதி மில்லுக்கு சமீபமாக நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தார். இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த மனைவி காயங்கள் ஏதுமின்றித் தப்பினார்.

இந்தச் சம்பவத்தில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி விபு

பக்கம் 20 »

## நேற்றுத் தோற்றிய பேருருவப் பெருநிலவு



நேற்றுத் தோற்றிய பெரு நிலவை (சுப்பர்மூன்) கிழக்கு நாடுகளில் படம் பிடிக்கும் ஆய்வாளர்கள்.

வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் பதவிச் சர்ச்சை

## ஆளுநருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் அவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க மாட்டார்!

யாழ்ப்பாணம், நவ.15

வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட உறுப்பினர் சி.தவராசாவுக்குப் பதிலாக ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் வை.தவநாதனை நியமிக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் மஹிந்த அமரவீர எழுதிய கடிதம் தொடர்பில் வடமாகாண சபையின் பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார்.

இந்தத் தகவலை அவரே தெரிவித்தார்.

பக்கம் 20 »

## அரச முகாமைத்துவ சேவையில் மேலும் 2878 பேர் சேர்க்கப்படுவர்

கொழும்பு, நவ.15

2878 இளைஞர், யுவதிகள் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் புதிதாக அடுத்த வருடம் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணைந்த

பக்கம் 20 »

# மர்மமான முறையில் மரணமான முன்னாள் போராளி; 12 நாள்களாகியும் மருத்துவ அறிக்கை வரவில்லையாம்!





"எனது கணவருக்கு 5 வருடங்கள் எந்த நோயும் வராது எனக் கூறி தடுப்பில் இருக்கும் போது ஊசி போட்டார்கள். 5 வருடங்கள் முடிந்தவுடனேயே அவர் திடீரென இறந்து விட்டார். இறந்து 12 நாள்கள் கடந்தும் எனது கணவரின் மருத்துவ பரிசோதனை அறிக்கை இன்னும் வரவில்லை". - என மனைவி அமலதாஸ்நாகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வின் பின் விடுதலையாகி வவுனியா, புளியங்குளம், பனிக்கநீராவி பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளியான எஸ்.அமலதாஸ் (வயது-46) என்பவர் கடந்த மூன்றாம் திகதி திடீரென மயக்கமுற்று விழுந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மர்மமான முறையில் உயிரிழந்திருந்தார். இம் மரணம் தொடர்பிலேயே அவரது மனைவி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த எனது கணவன் அமலதாஸ் 2009 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து அருணாசலம் முகாமில் தஞ்சமடைந்திருந்த போது இராணுவத்தினரின் அறிவுறுத்தலுக்கு அமைய சரணடைந்திருந்தார். அவரை புனர்வாழ்வுக்குட்படுத்தி கடந்த 2011 ஆம் ஆண்டு மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து விடுதலைசெய்தனர். இதன்போது தனக்கு ஊசி ஒன்று போடப்பட்டதாகவும் அதனால் 5 வருடங்களுக்கு எந்த நோயும் வராது என இராணுவத்தினர் கூறியதாகவும் அவர் என்னிடம் தெரிவித்திருந்தார். அவருக்கு ஊசி போட்டு 5 வருடங்கள் முடிந்த நிலையில் எனது கணவன் திடீரென மரணமடைந் துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி கூலி வேலைக்குச் சென்றவர் மதியம் வீட்டுக்குச் சாப்பிட வந்த போது திடீரென மயங்கி விழுந்தார். நாம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் இறந்து விட்டார் எனக் கூறினார்கள். நான் வைத்தியசாலையில் எனது கணவர் கூறிய விடயங்களைத் தெரிவித்திருந்தேன். அதனால் எனது கணவரின் கண், மூளை, பல், நாக்கு போன்ற உறுப்புக்களை பரிசோதனைக்காக எடுத்துவிட்டே உடலைத் தந்தார்கள். இன்று 12 நாள்கள் கழிந்தும் அது தொடர்பான எந்தப் பதிலும் வரவில்லை. எனது கணவரே எமது குடும்பத்தைப் பார்த்து வந்தார். தற்போது அவர் இறந்தமையால் 5 பிள்ளைகளுடனும் நான் மிகவும் கஷ்டப்படுகின்றேன். சமுர்த்தி உதவி கூட எமக்குக் கிடைக்கவில்லை. வாழ்வாதாரத்துக்காக போராட வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (100)

# எல்லை நிர்ணயம் தொடர்பாக மன்னாரில் கலந்துரையாடல் பூர்த்தி



மன்னார், நவ.15

உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயம் செய்தல் தொடர்பான மன்னார் மாவட்ட மட்டக் கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்டச்செயலாளரும் அரசாங்க அதிபருமான எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தேசிய வட்டார நிர்ணயக் குழுத் தலைவர் அசோகா பீரீஸ் தலைமையில் சட்டத்தரணி மிஸ்பா, வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, குழுவின் செயலாளர் திருமதி சுபத்திரா வலபொன ஆகியோருடன் மன்னார் மாவட்ட அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மாவட்டத்தின் முக்கியஸ்தர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறினார்.

அனைத்து மாவட்டங்களிலும் கருத்துக்களைச் செவிமடுத்து வந்த இக்குழு கடைசி மாவட்டமாக மன்னாரிலும் கருத்துக்களை உள்வாங்கி அப் பணியைப் பூர்த்தி செய்துள்ளது. (உ-112)

# பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்க்கும் கொடுமை இங்கு அதிகரிப்பு!

*அன்பும் கருணையும் எங்கே என்று கேட்கிறார் ஆறு.திருமுருகன்*



யாழ்ப்பாணத்தில் வயதான பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்க்கும் கொடுமை அதிகரித்துள்ளது. இதனால், சிறப்பான பண்பாட்டுக்குப் பெயர்போன யாழ்ப்பாணம் அன்பு, கருணை போன்ற விடயங்களில் தோற்றுப் போய்விட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் தலைவரும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் கவலை வெளியிட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றவர்கள் குறைவாகவிருந்த காலப் பகுதியில் மிக உயர்ந்த பண்பாடு இருந்தது. தற்போது கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்த பின்னர் பண்பாடு கீழ் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது எனவும் அவர் வேதனை தெரிவித்தார்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளருமான சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் எழுதிய 'சமய வாழ்வியல்' எனும் நூலின் வெளியீட்டு விழா கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

யாழ்ப்பாணத்தில் எத்தனையோ கோவில் திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் என்பன சிறப்பாக நடைபெற்றாலும் மூத்தோர்களை முதியோர் இல்லங்களில் கொண்டு சென்று சேர்ப்பது எங்களுடைய எதிர்காலத்துக்குத் தீமையாகும்.

யாழ்ப்பாணத்தில் 100 வயதான பேரறிஞர் ஒருவரது பிள்ளைகள் அனைவரும் யாழ்ப்பாணத்திலேயே இருக்கின்ற போதிலும் அவரை முதியோர் இல்லத்தில் சேர்த்துள்ளனர். இவ்வாறான நிலைமைகள் மாற்றப்படவேண்டும்.

முதியோர் இல்லங்களில் இருக்கின்ற பெற்றோர் வெளிநாடுளில் உள்ள தமது பிள்ளைகளுடன் அன்பாகக் கதைப்பதற்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தாலும் அவர்கள் கதைக்க மறுக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் கொடுமையானவை. - என்றார். (ம-10)

# வழிபட மக்கள் இல்லாத இடத்தில் விகாரைகளை அமைப்பது ஏன்?

*கொக்கிளாய் விகாரை குறித்து சிவமோகன் எம்.பி. கேள்வி*



முல்லைத்தீவு, நவ.15

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பகுதியில் பௌத்த விகாரை அமைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் 100 விகாரைகளைப் புனரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் வரவு செலவுத் திட்டத்திலும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

சட்டவிரோதமான முறையில் தமிழ் மக்களது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு அதில் விகாரைகள் அமைக்கப்படுதல் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எமது நாட்டைப் பொறுத்தவரை எங்கெங்கு சைவ மக்கள் வாழ்கின்றார்களோ அங்கு அவர்கள் தமது வணக்கஸ்தலங்களான கோவில்களை அமைப்பதில் தவறில்லை. அதேபோன்று முஸ்லிம், கிறிஸ் தவ மற்றும் பௌத்த மக்களும் அதிகளவில் வாழும் இடங்களில் தத்தமது வணக்கஸ்தலங்களை அவர்கள் அமைப்பதில் தவ றில்லை.

ஆனால், மாங்குளம் போன்ற ஒரு பௌத்த குடும்பமும் இல்லாத இடத்தில் விகாரை ஸ்தாபித்து - அங்கு சில விடுதிகளை அமைத்து - அங்கு வரும் சிங்கள மக்களுக்கான தங்குமிட வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது முற்றிலும் பலாத்காரமான விடயம். இதனை ஒரு சமயத் திணிப்பாகத்தான் நான் பார்க்கின்றேன்.

கொக்கிளாய் பகுதியில் சிங்கள மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 90 வீதமானோர் கிறிஸ்தவர்கள். அந்த மக்கள் தமக்கான தேவாலயத்தை அமைப்பதற்கு நாங்கள் எப்போதும் எதிர்ப்புத் தெரிவிக்கப்போவதில்லை. ஆனால் அங்குள்ள ஒரு சில குடும்பங்களுக்காக எமது மக்களதும் திணைக்களங்களதும் காணிகளை சட்டவிரோதமான முறையில் அபகரித்து ஒரு சில பிக்குகளின் ஏற்பாட்டில் விகாரை அமைக்கப்படுகின்றது.

வவுனியாவின் தென்பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு பௌத்த மக்கள் அதிகம் வாழ்கின்றனர். நாங்கள் அதனை எப்போதும் எதிர்த்ததில்லை.

எனவே, தமிழ் மக்களது பூர்வீக நிலங்களில் 'தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில்' விகாரைகள் அமைப்பதை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். - எனத் தெரிவித்தார். (ம-100)

# தூக்கில் தொங்கிய சிறுமி மரணம்

இளவாலை-பெரியவிளானில் பாடசாலைச் சிறுமி ஒருவர் பூட்டிய அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த அகிலேஸ்வரன் அகிலா (வயது-14) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். வீட்டிலுள்ள அறையொன்றில் குறித்த சிறுமி தூக்கில் தொங்கி இறந்தமை தொடர்பாக இளவாலைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ம-09)

# நல்லிணக்கக் கலாசாரக் குழுவினர் நேற்று சங்கானையில் சிரமதானம்

வலி.மேற்கு, நவ.15

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் 'கைகோர்த்தல்' நல்லிணக்க தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தறையில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள நல்லிணக்க கலாசாரக் குழுவினர் யாழ்ப்பாணத்தின் பல இடங்களையும் சென்று பார்வையிட்டனர்.

இதன் ஓர் அங்கமாக நேற்று திங்கட்கிழமை சங்கானை பிரதேச வைத்தியசாலைக்குச் சென்ற மேற்படி குழுவினர் அங்கு சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

சங்கானைப் பிரதேச மக்களுடன் இணைந்து வைத்தியசாலைச் சுற்றாடலைத் துப்புரவாக்கியமையுடன் வைத்தியசாலைக் கட்டடத்துக்கு வர்ணம் பூசும் செயற்பாட்டிலும் அவர்கள் ஈடுபட்டனர் (ம-53)

# தனியார் பஸ்களின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் இன்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கத் தீர்மானித் திருந்த சேவைப் புறக்கணிப்பு நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

நிதியமைச்சருடன் இடம் பெற்ற பேச்சுக்களையடுத்து போராட்டத்தில் ஈடுபடும் தமது தீர்மானம் விலக்கிக் கொள்ளப் பட்டுள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வாகனங்களுக்கான ஆகக் குறைந்த தண்டப் பணம் 2,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணிப் புறக்கணிப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# விதை உருளைக்கிழங்குகள் யாழ். மாவட்டத்தில் விநியோகம்

## தொடக்கி வைத்தார் அமைச்சர் ஐங்கரநேசன்



யாழ்ப்பாணம், நவ.15

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்குகளை விநியோகிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இதற்கான தொடக்க நிகழ்வு நேற்று திங்கட்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விதை உருளைக்கிழங்குகளை வழங்கி விநியோகத்தைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்டத்தில் இந்தமுறை 835 விவசாயிகள் ஏறத்தாழ 210 ஏக்கர் நிலப் பரப்பளவில் உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொள்ள உள்ளனர். இவர்களுக்கு சசி, றெட்லசோடா, அனோவா ஆகிய மூன்று ரக உருளைக் கிழங்குகள் மொத்தம் 167 மெற்றிக் தொன்கள் வழங்கப்படவுள்ளன.

இவற்றில் முதற்கட்டமாகத் தற்போது 325 விவசாயிகளுக்கு தலா 200 கிலோ எடையுள்ள, பிரான்சில் இருந்து தருவிக்கப்பட்ட சசி ரக உருளைக்கிழங்குகள் வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய விவசாயிகளுக்கு விரைவில் றெட்லசோடா, அனோவா ரக விதை உருளைக்கிழங்குகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் றெட்லசோடா ஐக்கிய அமெரிக்காவில் இருந்தும் அர்னோவா நெதர்லாந்தில் இருந்தும் இறக்குமதி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்குகளை வழங்குவதற்கென மத்திய அரசின் தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தில் 22.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் விதை கிழங்கு வழங்கப் படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் ஊடாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கும் விதை உருளைக்கிழங்குகள் வழங்கப்படவுள்ளன.

விதை உருளைக்கிழங்குகளை வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கநாதன், உருளைக்கிழங்கு விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் இ. தெய்வேந்திரம், யாழ். மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகார சபைத் தலைவர்.தியாகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-10)

# ஐ.நா.வதிவிட அலுவலகத்தில் இராணுவ முன்னாள் அதிகாரி

கொழும்பு, நவ.15

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி பிரிகேடியர் சுரேஸ் சாலேவுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடக் காரியாலயத்தில் உயர் பதவி வழங்கப்பட உள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவிலிருந்து அண்மையில் பிரிகேடியர் சுரேஸ் சாலே நீக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு நீக்கப்பட்ட சலேவுக்கு, நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடக் காரியாலய இராணுவ ஆலோசகர் பதவி வழங்கப்படவுள்ளது.

காரியாலயத்தின் இராணுவ ஆலோசகராக கடமையாற்றி வந்த மேஜர் ஜெனரல் உபய மெதவல, 48 ஆம் படையணியின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பதவி வெற்றிடத்திற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சாலே நியமிக்கப்பட உள்ளார் என்று இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)

# சொத்து மோசடியில் பேசப்படும் டேசி பாட்டி என்பவர் யார்?

## ஷிரந்தி ராஜபக்ஷ இப்படி விளக்கம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரின் சொத்து மோசடியில் மிகவும் பிரபலமாக பேசப்பட்டவர்களில் டேசி பாட்டியும் ஒருவராவார்.

இந்நிலையில், அவர் யார் என்பது குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ விளக்கமளித்துள்ளார்.

அண்மையில் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் டேசி பாட்டி குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.

டேசி பாட்டி என்பவர் என் சித்தி. அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளன. கடந்த காலங்களில் வர்த்தகர் ஒருவர் இரத்தினக் கற்கள் அடங்கிய பொதி ஒன்றைப் பாட்டியிடம் கையளித்தார்.

குறித்த வர்த்தகருக்கு காணப்பட்ட தனிப்பட்ட உறவு காரணமாகவே டேசி பாட்டியிடம் அதனை வழங்கியிருந்தார். இன்னும் ஒரு வர்த்தகர் பணப்பை ஒன்றை டேசி பாட்டியிடம் வழங்கியிருந்தார். அவை வர்த்தக நடவடிக்கைகளுக்காக அல்ல. அவர் அவரது சொத்துக்களை எனது மூன்று பிள்ளைகளுக்கும் வழங்கத் தீர்மானித்திருந்தார்.

அவருக்கு எனது பிள்ளைகள் குறித்தும் அக்கறை உள்ளது. அதில் என்ன தவறு? அவரிடம் நிறைய சொத்து இருந்தமையால் என் பிள்ளைகளுக்குக் கொடுத்தார்.

தற்போது அவருக்கு இந்தப் பிரச்சினைகளின் காரணமாக சரியான நினைவும் இல்லாமல் போய்விட்டது. இவ்வாறு செய்வதெல்லாம் பாவம் என ஷிரந்தி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான விடயங்களை ஊடகங்களுக்கு அறிவிப்பதன் ஊடாக மக்களை மீண்டும் முட்டாளாக்கும் நடவடிக்கையில் ராஜபக்ஷ குடும்பம் ஈடுபட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நாட்டின் வளங்களை விற்பதா? இது அரசே இல்லை.....!



நாட்டின் சகல வளங்களையும் விற்பனை செய்ய அரசு திட்டம் தீட்டியுள்ளதா? அவ்வாறு வளங்களை விற்பனை செய்வதாயின் இது அரசாங்கமே இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியின் கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த தினம் நேற்று கொழும்பு விகாரமகாதேவி பூங்கா திறந்தவெளியில் கட்சித் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

(ஐ)

# மஹிந்த சீனாவுக்கு 23 இல் விஜயம்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 23 ஆம் திகதி சீனாவுக்குச் செல்லவுள்ளார் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீன அரசின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது சீனாவின் உயர்மட்டத்தலைவர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

கடந்த வருடத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷ முதல் தடவையாக சீனாவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பொலிஸ்காரர் வீட்டில் திருடியவருக்கு மறியல்

கரவெட்டி.நவ.15

கரவெட்டிப் பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதான நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் பொ.சுப்பிரமணியம் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த 11ஆம் திகதி பகல் யாரும் இல்லாதநேரம் பார்த்து கரவெட்டி தெற்குப் பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டு முன் கதவை உடைத்து உள் சென்ற திருடர்கள் அலுமாரியில் இருந்த 2லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடி பொலிஸார், கரவெட்டி மேற்கு விக்னேஸ்வராப் பகுதியைச் சேர்ந்த 26வயதுடைய இளைஞனைக் கைதுசெய்திருந்தனர். அவரை நேற்று முன்தினம் பதில் நீதிவானின் முன்னிலையில் முற்படுத்திய போது விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(ஐ-9)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600


## அரசியல் எரிமலை; ஜனவரியில் வெடிக்கும்!

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக நல்லாட்சி அரசு தீர்க்கமான ஒரு கட்டத்துக்கு வந்துவிட்டது போன்றே தெரிகின்றது.

சரியோ, பிழையோ 2016 இற்குள் தீர்வு என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கனவு (அல்லது பிற்காலத்தில் அக்கால எல்லை காலாவதியாகும் நேரத்தை எட்டுவதைக் கண்டு, "2016 இல் தீர்வு என்பது எனது நம்பிக்கை மட்டுமே" என்று அவர் தெரிவித்த சமாதான விளக்கம்) ஓரளவுக்காவது சரிய நிலைமை வந்திருக்கின்றது என்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டியிருக்கிறது.

இப்போது கிடைக்கின்ற செய்திகளைப் படித்தால், இனப் பிரச்சினைக்குத் தீர்வாக நல்லாட்சி அரசு முன்வைக்கக் கூடிய யோசனைத் திட்டங்களும் அடங்கியதான புதிய அரசமைப்பு ஏற்பாடுகளின் நகல் வடிவம் - அல்லது மூலம் - அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் - அல்லது மாதங்களுக்குள் - கட்டவிழும் என்று நம்பிக்கை கொள்ள இடமுண்டு.

2016இல் தீர்வு என்றார் சம்பந்தன் ஐயா. ஆனால் குறைந்தபட்சம் தீர்வுக்கான அடிப்படை என்னவென்பதில் அரசுத் தரப்பின் நிலைப்பாடு, போக்கு ஆகியன பற்றிய விடயமாவது 2016 இன் முடிவில் வெளிச்சத்துக்கு வரும் என்று நம்புவதற்கு இப்போது இடம் ஏற்பட்டிருக்கின்றது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக, தற்போதைய முழு நாடாளுமன்றமும் தன்னை 'அரசமைப்புச் சபை'யாகவும் மாற்றிக் கொண்டுவிட்டது.

அந்த அரசமைப்பை உருவாக்குவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 21 உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டக் குழுவையும் நாடாளுமன்றம் அமைத்துள்ளது.

தவிரவும், வழிகாட்டல் குழுவுக்கு ஆறு தலைப்புகளில் உதவுவதற்காக ஆறு உபகுழுக்களையும் அரசமைப்புச் சபை நியமித்துள்ளது.

அடிப்படை உரிமைகள், நீதித்துறை, சட்டம் மற்றும் ஒழுங்கு, பொதுநிதி, பொதுச்சேவை, மத்திய அரசுக்கும் மாகாண சபைக்கும் இடையிலான உறவுகள் ஆகிய தலைப்புக்களிலேயே ஆறு உபகுழுக்களும் செயற்படுகின்றன.

இப்போது இந்த ஆறு உபகுழுக்களினதும், அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழுவினதும் கூட்டங்கள், அமர்வுகளில் எட்டப்பட்ட தீர்மானங்கள், முடிவுகள், சிபாரிசுகள் ஆகியவை அடங்கிய இடைக்கால அறிக்கைகள் ஒட்டுமொத்த அரசமைப்புச் சபையான நாடாளுமன்றத்தின் முன்னர் அடுத்து வரும் டிசெம்பர் மாதத்துக்குள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. ஜனவரியில் அந்த விடயங்கள் மீதான விவாதம் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உப குழுக்களினதும், மூலக்குழுவான வழிகாட்டல் குழுவினதும் அறிக்கைகள், சிபாரிசுகள் வெளிவரும்போது உத்தேச புதிய அரசமைப்பின் ஒட்டுமொத்தமான கட்டமைப்பு வடிவம் எந்த எல்லைகளுக்குள் அடங்கும் என்பது ஓரளவுக்கு துலாம்பரமாகும்எனவிடயமறிந்தவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

அந்த விடயங்கள் வெளியாகும்போதுதான், நாடு பெரும் அரசியல் குழப்பத்துக்குள் - அரசியல் அதிர்வுக்குள் - பிரவேசிக்கும் எனவும் நோக்கர்கள் கருதுகின்றனர்.

பதவியில் இருந்து துரத்தப்பட்ட ராஜபக்ஷக்களும், அவர்களது சகாக்களும், அவர்களைச் சூழ்ந்து நிற்கும் பேரினவாதிகளும் மீண்டும் ஆட்சிப்பீடமேறுவதற்குத் துடிப்புடன் காத்து நிற்கின்றனர். அதற்கான ஓர் அரசியல் துரும்புக்காக அவர்கள் தருணம் பார்த்து நிற்கின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை அந்தத் துரும்பு - தமிழர்களுக்கு நியாயத் தீர்வு வழங்கும் வகையிலான ஓர் அரசியல் ஏற்பாட்டை - அல்லது அரசமைப்பு உருவாக்கத்தை - இந்த நல்லாட்சி அரசு முன்னெடுக்கும் என்பதுதான்.

"ஓடு மீன் ஓட, உறுமீன் வரும்வரை காத்திருக்குமாம் கொக்கு" என்பர். அது போன்று தீர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய அரசமைப்பு பொதி என்ற உறுமீனுக்காகத்தான் அந்தத் தரப்புக் காத்திருக்கின்றது.

அரசமைப்புச் சபையின் வழிகாட்டல் குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை - அது பெரும்பாலும் டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரசமைப்புச் சபையான நாடாளுமன்றத்தில், வழிகாட்டல் குழுவின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் - முன்வைக்கப்படும்போது அங்கு அரசியல் எரிமலை குமுறத் தொடங்கும் என எதிர்பார்க்கலாம்.

அரசின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் அரசமைப்புச் சபையான நாடாளுமன்றத்தில் ஜனவரி மாதமளவில் நடைபெறக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

டிசெம்பரில் குமுறத் தொடங்கும் அரசியல் எரிமலை - பெரும்பாலும் ஜனவரியில் வெடித்துத் தனது தீப்பிழம்பைக் கொட்டத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கலாம்.

தீர்வுக்கான திட்டத்தை முன்னெடுக்கப் போகின்ற நல்லாட்சி அரசு அந்த அரசியல் எரிமலை வெடிப்பை எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பதில்தான் இலங்கையின் - குறிப்பாக சிறுபான்மையினரான தமிழர்களின் - அரசியல் எதிர்காலமும் தலைவிதியும் தங்கியிருக்கின்றன.

தன்னுடைய ஆட்சி, தன்னுடைய அதிகாரம் நிலைப்பதே முக்கியமானது என்ற சுயநல அரசியல் சிந்தனைக்குள் - குறுகிய வட்டத்துக்குள் - நல்லாட்சி அரசு சுழல நினைத்தால் - அதனையே நாடி நிற்குமாயின் - இந்த அரசியல் எரிமலைக்கு அதனால் முகம்கொடுக்க இயலாது திணற நேரிடும் என்பது திண்ணம்.

# ஏ.ரி.எம். சேவையில் அறவிடப்படும் 10 ரூபா இராணுவ ஓய்வூதியத்துக்கு!

கொழும்பு,நவ.15

ஏ.ரி.எம். சேவையில் அறவிடப்படும் 10 ரூபா இராணுவத்தினரின் ஓய்வூதிய நிதிக்குப் பயன்படுத்தப்படவுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

2017 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு–செலவுத் திட்டத்தில், அவசர தேவை நிமித்தம் ஏ.ரி.எம்மில் பணம் மீளப்பெறும்போது அறவிடப்படும் கட்டணத்தை 10 ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் அதிகரிப்புக்கான காரணத்தை ஆராய்ந்தபோது இதன் ஊடாக சேகரிக்கப்படும் பணம் இராணுவத்துக்காகப் பயன்படுத்தப்படவுள்ளமை தெரிய வந்துள்ளது.

இராணுவத்தினரின் ஓய்வூதிக் கொடுப்பனவுக்காக இந்தப் பணம் பயன்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் வருடத்தில் இராணுவத்தினரின் ஓய்வூதியத்துக்காக 3500 மில்லியன் ரூபா பணத்தை வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அரசின் இந்தத் திட்டத்துக்கு பலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். எனினும் இராணுவத்தினரை மதிக்கும் இலங்கையர் என்ற ரீதியில் இந்தக் கட்டணத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசின் விசேட பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஏ.ரி.எம்மில் பணம் எடுக்கும் போது ஐந்து ரூபா அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இடிந்து விழுந்த மதகின் சுவர் திருத்தப்படுமா?

வடமராட்சி, நவ.15

தம்பசிட்டி – அல்வாய் நாவலடி வீதியில் வத்தனையில் அமைந்துள்ள மதகு ஒன்றின் கரையோரப் பாதுகாப்புச் சுவர் இடிந்து விழுந்துள்ளதால் வீதியால் பயணிப்போரும், வாகனச் சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஒடுக்கமான இவ்வீதியில் வாகனங்கள் செல்லும்போது சைக்கிளோட்டிகள் பாதசாரிகள் வாகனங்களை விலத்தும் போது மதகின் கீழ் ஆழமாக உள்ள வெள்ளவாய்க்காலுக்குள் விழ வேண்டிய நிலை உள்ளது.

நீண்ட காலமாக இதே நிலையில் இருக்கும் இந்த மதகை அகலமாக்கி பாதுகாப்புச் சுவரை நிர்மாணிக்க வீதி அபிவிருத்தித்திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என பயணிகள், வாகன ஓட்டிகள் கேள்வி எழுப்புகின்றனர். (இ-30)

## யாழ்.குடாநாட்டில் ஐந்து முக்கிய வீதிகளை அகலிக்கும் திட்டம் முழுமை பெறாத நிலையில்!

வடமராட்சி, நவ.15

யாழ். மாவட்டத்தில் புலோலி–கொடிகாமம் – கச்சாய்வீதி, தம்பாலை – வளலாய் வீதி, வல்லை – தெல்லிப்பழை – அராலி வீதி, யாழ்ப்பாணம் – பொன்னாலை–பருத்தித்துறை வீதி ஆகிய நான்கு வீதிகளையும் அகலப் படுத்தி, 'காபெட்' வீதியாக்கும் திட்டம் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நான்கு வீதிகளுடன் பருத்தித்துறை – மருதங்கேணி வீதியையும் அகலமாக்கி 'காபெட்' வீதியாக்கும் திட்டமும் அடங்கி இருந்தது.

இந்த 5 வீதிகளும் கட்டம் கட்டமாக அகலிக்கப்பட்டு, 'காபெட்' வீதியாக்கும் திட்டத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்படுத்த திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் குறிப்பிட்ட 5 வீதிகளிலும் சிறுசிறு தூரங்களை உள்ளடக்கிய வீதிகளை பகுதி பகுதியாக 'காபெட்' வீதியாக்குவ தற்கு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கடந்த ஜுன் மாத பிற் பகுதியில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன.

இவற்றில் பருத்தித்துறை–மருதங்கேணி வீதிக்கு கோரப்பட்ட கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவ்வீதியில் செம்பியன் பற்று தொடக்கம் பருத்தித்துறை நோக்கிய வீதியில் 4 கிலோ மீற்றர் வீதி அகலிக்கப்பட்டு 'காபெட்' வீதியாக மாற்றும் வேலைகள் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றன.

எனினும் ஏனைய 4 வீதிகளிலும் குறிப்பிட்ட சில பகுதி வீதிகளை அகலிக்கக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட்டும் இன்னமும் அதற்கானவேலை கள் ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்வருடம் நிறைவு பெறும் நிலையில் இவ்வீதிகளைத் திருத்தி அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படாமையினால் சேதமடைந்துள்ள வீதிகளினூடாக வாகனங்களை ஓட்டுவோர் பெரும் சிரமங்களைஎதிர்கொண்டுள்ளனர்(இ-30)

# உலக மீனவர் தினத்தை முன்னிட்டு அவர்கள் நலன் சார்ந்த வேலைத்திட்டங்கள்

### முன்னெடுக்கத் தயாராகிறது கடற்றொழில் அமைச்சு

கொழும்பு,நவ.15

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு கிராமிய மீனவ அமைப்புகளை முன்னிலைப்படுத்தி மாவட்ட ரீதியாக மீனவர் நலன் சார்ந்த பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உலகமீனவர்தினம்எதிர்வரும் 21 ஆம் திகதி தேசிய ரீதியில் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான அனைத்து ஒழுங்குகளையும் கடற்றொழில் அமைச்சு தேசிய மீனவர் மகா சம்மேளனத்துடன் இணைந்து செய்துள்ளது.

மீனவர் தினம் சம்பந்தமாக கடற்றொழில் அமைச்சும் தேசிய மீனவர் மகா சம்மேளனமும் இணைந்து கிராமிய அமைப்புகளின் சம்மேளனத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கிராமிய மீனவ அமைப்புகளின் குறைபாடுகள், பிரச்சினைகள் கண்டறியப்பட்டு அதற்கான தீர்வுகள் எட்டப்படவேண்டும். கிராமிய மீனவ அமைப்புகளின் அங்கத்தவர்களுக்கு அறிவூட்டல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், கிராமிய மீனவ அமைப்பின் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சிரமதானங்கள் நேர்கொள்ளப்படவேண்டும். மேலும், மீனவ துறைசார் நிதி நிறுவனம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் உத்தியோகபூர்வ கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இ-59

### மருத்துவச் சான்றிதழ் இல்லாததால்

# 23 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்தினார் உணவக உரிமையாளர்!

ஓமந்தை, நவ.15

சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும் மருத்துவச் சான்றிதழ் இல்லாமலும் இயங்கி வந்த வவுனியாவில் அமைந்தள்ள உணவகம் உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் அவருக்கு 23 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

பொதுமக்களின் முறைப்பாட்டை அடுத்து வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள உணவகத்திற்குச் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கு சோதனை நடத்தினர்.

அப்போது வைத்தியச் சான்றிதழ் இல்லாமலும் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும், உணவகம் இயங்கி வந்தமை தெரியவந்தது.

அதை அடுத்து, உணவக உரிமையாளருக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகரால் வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உரிமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதிவான் அவருக்கு 23 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (இ-59)

### நாளை

16.11.2016
புதன்கிழமை
திதி : துதியை பி.ப 3.36 வரை
நட்சத்திரம் : ரோகிணி பி.ப 2.21 வரை
சுபநேரம் 4.37 – 6.07
இராகுகாலம் 12.07 – 1.37

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பணிகளைத் துரிதப்படுத்துங்கள்

## விசேட சந்திப்பில் ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, நவ.15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மறுசீரமைப்பு பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது சுதந்திரக் கட்சியை மறுசீரமைத்தல் மற்றும் அது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் கிராம மட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க கொழும்பு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி, கட்சி உறுப்பினர்களை இணைத்தல், கிளைகளை வலுப்படுத்தல், அதிகாரிகள் நியமித்தல், எதிர்காலத்தில் தேர்தல்களின் போது கட்சி என்ற ரீதியில் வெற்றியீட்டுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன எனவும் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி ஒழுக்க விதிகளை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பிரமிட் விசாரணைகளுக்கு விசேட பிரிவு உருவாக்கம்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



கொழும்பு, நவ.15

பிரமிட் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்த விசேட பிரிவு உருவாக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திர ஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

பிரமிட் வர்த்தகம் தொடர்பில் ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

பிரமிட் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துவதற்கு விசேட விசாரணைப் பிரிவு ஒன்றை உருவாக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இந்த விசேட பிரிவை உருவாக்குவதற்கு நிதிச் சபையின் அனுமதி கிடைத்துள்ளது. பொலிஸ் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்தப் பிரிவு உருவாக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரமிட் வர்த்தக நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த மத்திய வங்கிக்கு போதியளவு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றே இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், மத்திய வங்கிக்கு விசாரணை நடத்தும் அதிகாரத்தை வழங்காது, மத்திய வங்கி தொடர்பில் புதிய சட்ட மூலம் ஒன்றை உருவாக்க வரவு செலவுத் திட்டத்தில் செய்யப் பட்டுள்ள பரிந்துரைகள் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பித்தக்கது. (ஐ)

# சுதந்திரக் கட்சியிடையே இணக்கம் ஏற்படுத்த முடிவு



கோப்புப்படம்

கொழும்பு,நவ.15

பிளவுபட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு பிரிவினருக்கும் இடையில் மோதல் நிலைமை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினரும் ஒன்றாக இணைந்து ஒரு கட்சியாக எதிர்வரும் காலங்களில் செயற்படுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இணக்கப்பாட்டில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டு எதிர்க் கட்சியின் குழுவை நியமிக்கவுள்ளார் என்று அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய அரச தரப்பில் அநுர பிரியதர்ன யாப்பா, மஹிந்த அமரவீர், சுசில் பிரேமஜயந்த, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன ஆகிய அமைச்சர்களின் தலை மைத்துவத்தில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியால் நியமிக்கப்படும் குழு தொடர்பில் இது வரையில் தகவல் வெளியாகவில்லை.

இதேவேளை, பிளவுபட்டுள்ள இரு தரப்பினரும் ஒன்றிணைந்தால், ஐக்கிய தேசியக் கட்சி பெரியளவில் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# தென்கொரியாவில் இலங்கையர் ஆர்ப்பாட்டம்



அங்கவீனமுற்ற முன்னாள் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து தென் கொரியாவில் உள்ள இலங்கையர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

தென்கொரியாவின் சொவுல் நகர் சோல் ரயில்வே நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

கொரியாவிலுள்ள இலங்கையர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர். தென் கொரியாவிலுள்ள இலங்கையர்கள் முகநூலின் மூலம் அறிவித்து, பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது (ஐ)






கெயார் சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் கொழும்பில் நடைபெற்று வந்த வின்ஸ் கலைப்பெருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்தது. இதில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக பல தசாப்த காலங்களாக இலங்கை கலைத்துறையில் ஆற்றிய கௌரவமான பணியைப் பாராட்டி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார், அரங்க ஆய்வு கூடத்தின் ஸ்தாபகர் பேராசிரியர் சி.மௌனகுரு, மக்கள் களரி நாடக அமைப்பின் இயக்குநர் பேராசிரியர் பராக்கிரம நெரியல்ல ஆகியோருக்கு நல்லிணக்கத்துக்கான மீயுயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. ஜனாதிபதியிடம் இருந்து மரியசேவியர் அடிகளார் பெறுகிறார். அருகில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் காணப்படுகின்றனர். (ஐ)

# கருவிலேயே திட்டமிட்டு அழிக்கப்படும் தமிழினம்

### தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் திருகோணமலை அமைப்பாளர் தெரிவிப்பு



திருகோணமலை, நவ.15

தமிழ் இனப்பெருக்கத்தை கருவிலேயே திட்டமிட்டு அழிக்கும் பெரிய தமிழின அழிப்பு இடம்பெற்று வருகின்றது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கே.நவினகாந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தலைவர் கே.நந்தகோபனின் 8 ஆவது ஆண்டு நினைவுதினம், மட்டக்களப்பில் அமைந்துள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் உரையாற்றியபோது கூறிய தாவது;

"இந்தத் திட்டமிட்ட இன அழிப்பானது மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் மிகத் தீவிரமாக இடம் பெறுவதுடன், எமது தமிழ் வைத்தியர்களாலேயே இது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அறியமுடிகின்றது. இந்தத் திட்டமானது ஏற்கெனவே பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கு வேறுவகையில் முன்னெடுக்கப்பட்டது.


ஒரு பெண்ணுக்கு ஒரு குழந்தை கிடைத்தவுடன் அவரின் அனுமதி இல்லாமலேயே கருவை உருவாகுவதை தடுக்கும் சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டன. இன்று இந்த நடவடிக்கை பெண்களின் அனுமதியுடன் நவீன முறையில் சிகிச்சை என்ற பெயரில் கருக்கலைப்புச் சதி வேலை செய்யப்படுகின்றது.

மேலும், அண்மைக்கால புள்ளி விவரங்களின்படி மன்னார் உட்பட சில பகுதிகளிலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு 5 வருடங்களில் புதிய மாணவர்களைச் சேர்க்க முடியாத அவல நிலை ஏற்படலாம். இந்தச் சதித்திட்டமானது கிழக்கு மாகாணத்தையும் நோக்கி நகர்கின்றது.

எனவே இதுவிடயத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் பிரிவானது பெண்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

எமது தமிழ்ச் சமூகத்துக்கான பெரிய சவாலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக வேண்டும்"- என்று குறிப்பிட்டார். (எ)

## தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் யானைகளால் பொருள்கள் சேதம்



அம்பாறை, நவ.15

அம்பாறை, திருக்கோவில் பிரதேசசெயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் 2 வீடுகளையும் கடை ஒன்றையும் பயிர்களையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

இதன்போது வீட்டில் உறங்கிக் கொண்டு இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். வீட்டில் இருந்த சமையல் பொருள்கள், உபகரணங்கள், கடையில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் மற்றும் பயிர்களை யானைகள் நாசப்படுத்தி உள்ளன. அதனைத் தொடர்ந்து அயலவர்களில் உதவியுடன் யானைகளை விரட்டியடித்துள்ளனர்.

இனையடுத்து நேற்று திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்தப் பகுதி கிராம சேவகர் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோருக்கு அறியப்படுத்தப்பட்டு அவர்களும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து சேத விவரங்களைப் பதிவு செய்துள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# கிழக்கு மாகாண தமிழ்த் தேசிய மாணவர் பேரவை உருவாக்கம்

மட்டக்களப்பு, நவ.15

கிழக்கு மாகாணத்தின் தமிழ்த் தேசிய மாணவர் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு குருமண்வெளியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மாணவர் பேரவையின் தாபகத் தலைவர் ஆறுமுகம் ஜோன்சன் தெரிவிக்கையில்:-

"சகல திறமைகளையும் கொண்டதாக வடகிழக்கில் உள்ள மாணவர்களை சர்வதேசதரத்தில் வளப்படுத்திக் கொள்ளும் வகையில் மாற்ற வேண்டிய தேவை உள்ளது.

வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு தமிழ்த் தேசிய மாணவர் பேரவை ஆரம்பிக்கப்பட்டு வடக்கில் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கிழக்கில் அதன் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் மற்றும் நலன் விரும்பிகளின் உதவிகளைக் கொண்டு வினைத்திறன் மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் வகையில் இந்தப் பேரவை செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன்கீழ் கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவராக சி.கோகுல்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக செ.டிலோஜன், பொருளாளராக வே.லோகுராஜன், மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளராக தெ.புவிராஜ், அம்பாறை மாவட்ட இணைப்பாளராக தி.விஜய் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 8 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகாலப் போரால் கல்வி, கலை, கலாசாரங்களை இழந்த சமூகத்தின் நிலையை மேம்படுத்தும் வகையிலான நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பிலும் வீழ்ச்சியடைந்து செல்லும் கல்வி நிலையை மேம் படுத்தும் வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது."-என்றார். (எ)

## நீரிழிவுதினத்தையொட்டி நாளை நடையவனி

மட்டக்களப்பு, நவ.15

தொற்றா நோயான உலக நீரிழிவு தினத்தையொட்டி விழிப்புணர்வு நடையவனி நாளை புதன்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்த நடையவனி வைத்திய சாலையிலிருந்து ஆரம்பமாகி காந்தி பூங்காவரை சென்று மீண்டும் வைத்தியசாலையைச் சென்றடையும்.

நடையவனியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன், தாதிய உத்தியோகத்தர்களால் மட்டக்களப்பு பிரதேச செயலகத்தில் வீதி நாடகம் நடத்தப்படவுள்ளது. (எ)

## திருமலையில் மீனவர்கள் மூவர் கைது

திருகோணமலை, நவ.15

திருகோணமலை, குச்சவெளிக் கடற்பரப்பில் டைனமட் வெடிபொருளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 3 மீனவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 99 கிலோகிராம் மீனுடன் படகு ஒன்றையும் கைப்பற்றியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

டைனமைட் வெடிபொருளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 21, 30, 36 வயதுகளை உடைய அந்த மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்து, தம்மிடம் ஒப்படைத்தனர் என்று பொலிஸார் கூறினர். (எ)

# விதை நடும் கருவி உருவாக்கி அம்பாறை வாசி சாதனை



அம்பாறை, நவ.15

அம்பாறை, திருக்கோவில் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட தம்பிலுவில் 2ஆம் பிரிவைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ரவிதாஸ் என்பவர் விதைநடும் கருவியைக் கண்டு பிடித்துள்ளார். இதன் அறிமுக நிகழ்வு சாகாமம் பிரதேசத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. அந்த இயந்திரத்தின் செயற்பாட்டை திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ். ஜெயரூபன், விவசாயத் திணைக்களத்தின் போதனாசிரியர் தர்சினி ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் அவதானித்தனர். இவரின் புதிய கண்டுபிடிப்பை தேசிய ரீதியில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு தானாகவே விதை நடும் முதலாவது கருவியை உருவாக்கிய இவர், தற்போது மின்சாரத்தின் உதவியுடன் விதைகளை நடும் கருவியை உருவாக்கியுள்ளார். இந்த இயந்திரத்தின் மூலம் மணித்தியாலத்துக்கு 3 ஏக்கரில் விதைகளை நடமுடிவதுடன், ஒரே நேரத்தில் 4 நிரல்களில் நடக்கூடிய வசதியையும் கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த இயந்திரத்தை வடிவமைத்தவர் கூறுகையில், "ஒருதடவையில் 8 கிலோ கிராம் தானியங்களைக் கொள்ளவு செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள இவ் இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு குறைந்தது 15 ஏக்கர் நிலங்களில் விதைகளை நட முடியும்.

இந்த இயந்திரத்தின் பின்புறம் உள்ளசக்கரம் விதையைவிதைக்கின்ற இடைவெளியை நிர்ணயிப்பதுடன், தானாகவே மடுக்களைத் தோண்டி தானியங்களை இட்டு மூடி அவ்விடத்தை அமர்த்தி விதைகளை நடும். சோளம், பயறு, கௌப்பி, நிலக்கடலை போன்ற மேட்டு நிலப்பயிர்களுக்கான விதைகளை நடமுடிவதுடன் குறிப்பாக குறைந்தளவு நேரத்தில் கூடிய நிலப் பரப்பில் விதைப்பதற்கான வாய்ப்பு உள்ளது"- என்றார். (எ)

## நாவலர் நினைவு தினமும் சிவதொண்டர் கருத்தரங்கும்

அகில இலங்கை இந்து மாமன்றமும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு நிகழ்வும், சிவதொண்டர் பயிற்சிக் கருத்தரங்கும் எதிர் வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இந்துக் குருமார், இந்து ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உயர்தர, சாதாரணதரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள், இந்து மத அமைப்புக்களின் பிரதிநிதிகள், இந்து மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கேட்டுள்ளார். (வ-15)

## கந்தளாய்க் குளத்துக்கு அருகில் கைக்குண்டு மீட்பு

திருகோணமலை, கந்தளாய் குளத்துக் கற்பாறைக்கு அருகில் கைக்குண்டு ஒன்று, நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக, கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக்குளத்துக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர் வழங்கிய தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார், கைக்குண்டைப் பார்வையிட்டனர். மேலும் அதனைச் செயலிழக்க நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றனர் என்று தெரிவித்தனர்.

கைக்குண்டு இருக்கும் கற்பாறைக்கு அருகில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# ஐ.நாவில் இடம்பெற்ற மாநாட்டில் ஈழத்தமிழரை அழித்த காட்சிகள்

போர்த்துக்கல்,நவ.15

ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்புத் தொடர்பான காட்சிகள் ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட மாநாடு ஒன்றில் காண்பிக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் அரசியல் உரிமை மற்றும் பொருளாதார, சமூக, கலாசார உரிமை ஆகிய இரு சாசனங்களின் 50 ஆவது வருடத்தை கொண்டாடும் முகமாக நடத்தப்பட்ட சர்வதேச மாநாடு போர்த்துக்கலின் தலைநகரான ஸ்பெயினில் கடந்த 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெற்றது.

சர்வதேச வழங்கறிஞர் சங்கத்தால் நடத்தப்பட்ட மாநாட்டுக்கு, பிரான்ஸை தளமாக கொண்டு இயங்கும் தமிழர் மனிதர் உரிமைகள் மையம் உத்தியோக பூர்வமாக அழைக்கப்பட்டிருந்தது.

கடந்த இரண்டு சகாப்தங்களுக்கு மேலாக ஐக்கிய நாடுகள் சபையில் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வரும் தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தினரது நீண்டகால சேவையையும், அவர்களால் ஈழத் தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள், சர்வதேச சட்டங் களுக்கமைய அவர்களது இணைய தளத் தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள காரணி களுக்காக, மாநாட்டுக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள்.

இந்த அமைப்பு சார்பாக இந்த மாநாட்டுக்கு, அதன் பொதுச் செயலாளர் ச. வி. கிருபாகரன், சர்வதேச இயங்குநர் டியேற்றி மக்கோணல் ஆகியோர் கலந்து கொண்டனர், உலகின் பல பகங்களிலிருந்தும் முக்கிய சர்வதேச சட்டத்தரணிகள், வழக்கறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்விமான்கள், மனித உரிமை ஆர்வலர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போதே அந்தக் காணொளிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

அங்கு உரையாற்றிய, டியேற்றி மக்கோணல், இலங்கைதீவில் ஈழத்தமிழரது அவல நிலைபற்றியும், ஈழத்தமிழர்களுக்கு இலங்கைத் தீவில் நடைபெறுபவை யாவும் ஓர் இன அழிப்பு என்பதை ஆதாரங்களுடன் எடுத்துரைத்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்புக்கான ஆவணங்கள் இந்த மா நாட்டில் காட்சி படுத்தப்பட்டுள்ளன சர்வதேச முக்கிய புள்ளிகளுடன் பலசந்திப்புக்களையும், பரப்புரைகளையும், பிரான்ஸை தளமாக கொண்டு இயங்கும் தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச. வி. கிருபாகரன் மேற்கொண்டிருந்தார்.

கடந்த பல ஆண்டுகளாகக் கிருபாகரன் பிரான்ஸைத் தளமாக கொண்டு இயங்கும் தமிழர் மனிதர் உரிமைகள் மையம் ஒன்றை அமைத்து ஈழத் தமிழர்களுக்காக ஜெனிவாவில் குரல் கொடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். மாநகரசபை பணியாளர்களுக்கு நியமனம் வழங்க டக்ளஸ் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ். மாநகர சபைப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மாகாண, உள்ளூராட்சி சபைகளுக்கான அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் சுகாதார ஊழியர்கள் சுமார் 197 பேர் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கடந்த 7 ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்களுடன் இணைந்து நிரந்தரப் பணியாளர்களும் இந்தப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருவதால், யாழ். மாநகரம் குப்பைகளால் நிரம்பி வழிகின்றது.

இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் அபாயம் உள்ளது. மாநகரசபையின் அனைத்து உட்கட்டமைப்பு செயற்பாடுகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், யாழ். நகரத்தின் தற்போதைய தேவையைக் கவனத்தில் கொண்டு, யாழ். மா நகரசபையில் தற்காலிகமாகப் பணியாற்றுவோருக்கு நிரந் தர நியமனம் வழங்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் செய லாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோரிடம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-10)

# மீண்டும் பொலிஸில் ஆஜரானார் வீரவன்ச



கொழும்பு,நவ.15

வீடமைப்புத்துறை அமைச்சராக இருந்த வேளையில் முறைகேடாக வாகனங்களை பயன் படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச நேற்று நிதிமோசடி பொலிஸ் பிரிவில் ஆஜராகியுள்ளார்.

ஏற்கனவே கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவர் விசார ணைக்கு உட்படுத்தப்பட்ட போதும் சுகவீனம் காரணமாக விசாரணையின் இடையில் வெளியேறியிருந்தார்.

இந்தநிலையில் நேற்று அவர் மீண்டும் ஆஜராகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விமல் வீரவன்சவின் சகோதரர் சரத் வீரவன்சவும் வாகன முறைகேடு தொடர்பில் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மூன்று லட்சம் அகதிகளுக்கு கனடா அனுமதி

றொறன்றோ,நவ.15

கனடா அரசு அகதிகள் தொடர்பில் புதியதொரு முடிவை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் மூன்று லட்சம் அகதிகளை அனுமதிக்கக் கனடா முடிவு செய்துள்ளது என்று கனடாவின் அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் ஜோன் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அந்த அரசு 2017 ஆம் ஆண்டுக்கான அகதிகளை ஏற்கத் தயார் என்றும் கடந்த ஆண்டும் இதே எண்ணிக்கையான அகதிகளை தாம் அனுமதித்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மக்கள் தொகை, பொருளாதார நிலையை கருத்தில் கொண்டே இந்த வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கனடா அரசு தெரிவித்துள் ளது.

சிரியாவில் உள் நாட்டுப் போர் நிலவி வருவதால் அந்த நாட்டைச் சேர்ந்த பெரும் எண்ணிக் கையானோர் அகதிகளாக பிற நாடுகளுக்கு குடியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பிரான்ஸின் காலேஸ் பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த அகதிகள் அகற்றப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சுகாதாரத் தொழிலாளரின் பிரச்சினை இன்னும் தீர்த்து வைக்கப்படவில்லை

## அலட்சியப்போக்கை கண்டிக்கிறது மாக்சிச லெனிச கட்சி

யாழ்ப்பாணம்,நவ.15

யாழ்.மாநகரசபை தற்காலிக சுகாதார ஊழியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான விடயத்தில் யாழ்.மாநகரசபை நிர்வாகமும் வட மாகாணசபையினரும் காட்டி வரும் அலட்சியப் போக்கை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

உடனடியாக அத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்றும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தொவிக்கப்பட்டுள்ளதாவது:-

சுகாதாரத் தொழிலாளர்கள் தங்களை நிரந்தரமாக்கக் கோருவது அவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்கல்ல. தமது வாழ்க்கையின் வாழ்வாதாரத்துக்கும் ஓய்வுதியத்துக்கும் ஏனைய சட்ட பூர்வமான உரிமைகளுக்குமாகவே.

அத்தகைய ஏழைத் தொழிலாளர்களின் தொழிலுக்கு உலை வைக்கும் வகையில் நிந்தரமாக்குவதைத் தட்டிக் கழித்து வருவதும், பேச்சு வார்த்தையில் அச்சுறுத்தல் விடுத்து சமூக ஏற்றத் தாழ்வு மனப்பான்மையில் அமைச்சர்களுடன் நிர்வாகிகளுடன் நடந்து கொள்வது அநாகரிகமானதாகும்.

யாழ்.மாநகரசபைத் தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு தமது கோரிக்கைகளை வென்றெடுக்கப் போராடுவது எந்தவகையிலும் தவறானதல்ல; அது நியாயமானதே.

யாழ்.மாநகரசபையில் 1970 இல் 500இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அன்றைய முதல்வர்களான அல்பிரட் துரையப்பா, அ.விஸ்வநாதன் விசேட ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோரின் நிர்வாகத்தில் கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களை நடத்தியே தமக்கு மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டு வந்த உரிமைகளை வென்றெடுத்த வரலாறு உள்ளது.

எனவே சுகாதாரத் தொழிலாளர்கள் தமது கோரிக்கையில் வெற்றிபெற எமது கட்சி தனது முழு ஆதரவைத் தொவிக்கிறது.- என்றுள்ளது. (இ-10)

# அமெ.புதிய ஜனாதிபதி தெரிவு இலங்கை உறவை பாதிக்காது

## அமெரிக்கத் தூதுவர் அதுல் கசாப் தெரிவிப்பு

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி தெரிவு, இலங்கையுடனான உறவில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கசாப் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஆட்சி மாற்றம் இலங்கையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளின் உறவுகளும் தொடர்ந்தும் பேணப்படும் எனக் குறிப்பிட்ட அவர், இலங்கையின் செயற்பாடுகளில் அமெரிக்கா தொடர்ந்தும் அக்க றையுடன் செயற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணைகள் ஆகியவற்றில் அமெரிக்கா பங்காளியாக உள்ளது.

இந்த நிலையில், இலங்கை தொடர்பான அமெரிக்காவின் செயற்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்று அண்மையில் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆர்ப்பாட்டத்தில் குதிக்கவுள்ளனர் ஓட்டோ, மோ.சைக்கிள் சாரதிகள்

## போக்குவரத்து விதி மீறல்களுக்கான அபராதத் தொகை அதிகரிப்பை எதிர்த்து

கொழும்பு, நவ.15

மோட்டார் போக்குவரத்து விதி மீறல்களுக்கான அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஓட்டோச் சாரதிகள் போராட்டத்தில் குதிக்க உள்ளனர்.

அபராதத் தொகை 2500 ரூபாவாக உயர்த்தப்பட்டமைக்கு எதிராக அரசு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் அனைத்து ஓட்டோ சாரதிகளையும் இணைத்துக் கொண்டு நாடாளுமன்றை சுற்றி வளைத்து போராட்டம் நடத்தப்படும் என்று இலங்கை சுய தொழில் ஓட்டோ தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

நாம் இந்த அபராதத் தொகை அதிகரிப்பை எதிர்க்கின்றோம். ஓட்டோசாரதிகளுக்கு அரசு எவ்வித சலுகைகளையும் வழங்கவில்லை. ஓட்டோ தொழிலில் ஈடுபடுவோர் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடுவோருக்கு விதிக்கப்படும் குறைந்த பட்ச அபராதம் இதுவரையில் 500 ரூபாவாக காணப்பட்டது.

தற்போது இந்தத் தொகை 2500 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு தொகை உயர்த்தப்பட்டமையை நாம் எதிர்க்கின்றோம்.

கட்டண அதிகரிப்பு குறித்து அமைச்சருடன் பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளோம்.

பேச்சு மூலம் தீர்வு எட்டப்படாவிட்டால், ஓட்டோ உரிமையாளர்கள் சாரதிகளை இணைத்துக் கொண்டு போராட்டம் நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட யோசனையில் முன்வைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த தண்டப்பணமான 2,500 ரூபாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புப் பட்டிப்போராட்டம் நடத்தப்படவுள்ளதாக இலங்கை மோட்டார் சைக் கிள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சகல சாரதிகளும் தங்களுடைய வாகனங்களில் கறுப்புப் பட்டிகளை கட்டிவிடுமாறும் அந்தச் சங்கத்தின் செயலாளர் சிந்தன அமரசிங்க தெரிவித்தார்.

ஆகக்குறைந்த தண்டப் பணத்தை விடவும், சாரதி ஒருவர் தன்னுடைய வாகனத்துக்குக்காக மாதம் ஒன்றுக்கு செலவிடும் தொகையானது அதிகமாகும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

யாரும், வேண்டும் என்று விபத்தை ஏற்படுத்த மாட் டார்கள். வீதிகளில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலின் போது, மிகவேகமாக செல்வதற் காகவே மோட்டார் சைக்கிள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறைமையாகும்.

இந்த நடைமுறைக்கு சர்வதேசம் ஆதரவு நல்கியது. எனினும், அதனைபுரிந்துகொள்ளாத, இந்த அரசு சாரதிகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள முயல்கிறது. இதேவேளை, வீதிகளில் ஒழுங்கு வரம்பு தொடர்பில், எமது நாட் டில் எவ்விதமான அவதானமும் செலுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில், இந்தத் தண்ப்பணம் அறிவிப்பானது போக்குவரத்துப் பொலிஸாரின் மோசடி செயற்பாடுகள் அதிகரிக்கும் என்பதுடன் பொலிஸாரின்மீது மக்கள் வைத்திருக்கின்ற அவநம்பிக்கையை இன்னுமின்னும் உறுதிப்படுத்தும் செயற்பாடாகவே இது அமையும் என்றும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 15.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 10.45 - 11.45 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 3.00 - 4.30 |
| குளிகன் | : 12.00 - 1.30 |
| எமகண்டம் | : 9.00 - 10.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : தெளிவு - மனதில் உள்ள குழப்பங்கள் நீங்கி தெளிவு பெறும் நன்நாள்.

**ரிஷபம்** : பொறுமை - நிதானத்தைக் கடைபிடித்து நிம்மதியை நாடுவீர்கள்.

**மிதுனம்** : நலம் - இன்று மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காண்பீர்கள்.

**கடகம்** : லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**சிம்மம்** : இரக்கம் - இன்று உங்களின் இதயத்தில் இரக்கம் ஏற்படும்.

**கன்னி** : சிந்தனை - இன்று உங்கள் சிந்தனைகள் சிறந்து மிளிரும், அறிவு ஒளிரும்.

**துலாம்**: ஓய்வு - இன்று சந்திராஷ்டமம் என்பதால் வீண்அலைச்சலைக் குறைத்து ஓய்வு எடுக்க வேண்டும். சந்திராஷ்டமம்: சுவாதி , விசாகம் 1,2,3ஆம் பாதங்கள்.

**விருச்சிகம்**: சோதனை - இன்று ஆரம்பிக்கும் காரியங்கள் அனைத்திலும் சோதனைகளைச் சமாளித்து சாதனையாக மாற்றுவீர்கள்.

**தனுசு**: வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மையடைந்து வெற்றி பெறுவீர்கள்.

**மகரம்**: அசதி - உழைப்பால் ஏற்பட்ட களைப்பு உடலில் தோன்றும்.

**கும்பம்**: புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை யடைந்து புகழ் ஏற்படும்.

**மீனம்**: தடங்கல் - உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு காரியத்தில் தடங்கல் ஏற்படும்.

## பிரேஸிலில் இருந்து சீனி இறக்குமதி நிறுத்தப்படும்

### சீனி இறக்குமதியாளர்கள் தீர்மானம்

கொழும்பு, நவ.15

பிரேஸிலிலிருந்து சீனி இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு சீனி இறக்குமதியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரேஸிலிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 4 சீனி கொள்கலன்களிலிருந்து கொகேய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்தது.

இவ்வாறு போதைப் பொருள் மீட்கப்பட்ட சந்தர்ப் பங்களில் சீனி இறக்குமதியாளர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பிரேஸிலிருந்து சீனி இறக்குமதி செய்வதனை நிறுத்திக்கொள்ள இறக்குமதியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரேஸிலிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100 கொள்கலன்கள் சுங்கத் திணைக்களத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சீனி தேங்கிக் கிடந்தால் அவை பழுதடையக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரேஸிலிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு சுமார் 400 மில்லியன் டொலர்கள் பெறுமதியான சீனி இறக்குமதி செய்யப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் பாகிஸ்தான், உக்ரேய்ன், தாய்லாந்து, ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்து சீனி இறக்குமதி செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளதாக சீனி இறக்குமதியாளர்கள் தீர்மானித்துள்ளனர். (எ)

## தோட்ட மக்களின் உரிமைக்காக நாம் கெஞ்சவில்லை; தட்டியே கேட்கிறோம்

### அடித்துக் கூறுகிறார் அமைச்சர் திகாம்பரம்



ஹற்றன், நவ.15

பெருந்தோட்ட மக்களுக்காக உரிமைகளைக் கெஞ்சிக் கேட்கவில்லை. தட்டியே கேட்கப்படுகின்றன. இதனால் 2017 வரவு செலவுத் திட்டத்தில் 25 ஆயிரம் வீடுகளை காணி உறுதியுடன் அரசு முன்வந்துள்ளது என்று மலை நாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

புதிய பாதை புனரமைப்புக்கான பணிகளை ஆரம்பித்து வைத்து அமைச்சர் உரை நிகழ்த்து கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வரலாற்று ரீதியில் முதல் முறையாக வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக மலையக மக்களுக்கு பயன்தரும் வகையில் நிதி ஒதுக்கீடும் சலுகைகளும் இந்த அரசினால்தான் வழங்கப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் காணப் படும் ஒற்றுமையின் பயனாகவே எதிர்வரும் காலங் களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும். இதற்கு அமைவாக தோட்டப் பகுதிகளில் கட்சி பேதமற்ற மக்கள் ஒற் றுமை எமக்கு வேண்டும்.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில் பேட் டைகள் அமைக்கப்படும்.

அதற்கமைவாக இரண்டு வருடத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேலை வாய்ப்புகள் வழங்க எமது அமைச்சு திட்டம் வகுத்துள்ளது.

நான் தொழிலாளர்களை ஏமாற்ற துணைபோக மாட்டேன்." -என்றார். (எ)

## எயிட்ஸ் நோயால் 34 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ.15

இந்த வருடத்தின் கடந்த 10 மாதங்களில் எச்.ஐ.வி. தொற்றால் 34 பேர் உயிரிழந்தனர்.

ஆண்களே அதிகமாக எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர் என்று பாலியல் நோய்கள் மற்றும் தேசிய எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார். வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 405 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அவர்களில் 65 வீதமானோர் ஆண்கள் என்றும் மருத்துவர் சிசிர லியனகே குறிப்பிட்டுள்ளார். மேல் மாகாணத்திலேயே அதிகமான எயிட்ஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று பாலியல் நோய்கள் மற்றும் தேசிய எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

## எட்டு உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு, நவ.15

மட்டக்களப்பு, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலர் பிரிவில் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின்போது, 8 உணவகங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர் என்று ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப்கான் தெரிவித்தார்.


உணவகங்கள் துப்புரவின்றிக் காணப்படுகின்றன என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து ஓட்டமாவடி பிரதேசத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடத்தினர். அதை அடுத்து 8 உணவகங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் அதன் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

காலைக்கதிர்
Kalaikkathir



சிந்து

**யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கான தற்காப்புப் பயிற்சி ஒன்று மூன்று தினங்கள் யாழ். கன்னாதிட்டி காளி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. பயிற்சி நெறிக்கு இந்தியாவிலிருந்து பெண்களுக்கான தற்காப்புக் கலையின் தேசிய விருதைப் பெற்ற துளசி ஹெலன் கலந்து கொண்டார். அவர் பெண்களுக்கான பாதுகாப்பு தற் காலத்தில் எந்தளவுக்குக் காணப்படுகின்றது என்பது பற்றிய ஒரு விளக்கத்தை அளித்திருந்தார்.**



துளசி ஹெலன்

# தற்காப்பு ஒன்றுதான் பெண்களைக் காக்கும்

மனிதப் படைப்பே கடவுளுடைய சிறந்த படைப்பு. அதிலும் பெண் ஓர் உன்னதமானபடைப்பு. பெண்களைக் கை கூப்பிக் கும்பிட வேண்டும் என்று சொல்வார்கள். கடவுளால் மட்டுமே ஓர் உயிரைப் படைக்க முடியும். அவ்வாறான ஓர் உயிரை இந்த உலகிற்கும் கொண்டு வருபவள் பெண் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அம்மா,அக்கா, தங்கை, மனைவி என்று பல உறவுகளில் பெண் உருவெடுக்கின்றாள். மதிக்கப்பட வேண்டிய பெண்களைத் தற்கால சமுதாயம் மிதிக்கின்றது என்பது நாம் அறிந்த உண்மையே. அனைத்து விதமான கஷ்டங்களையும் தாங்கக் கூடியவள் பெண். ஆனால், ஆதிகாலந்தொட்டு அவர்களுக்கான பாதுகாப்பு என்பது இல்லவே இல்லை.

முதலில் தங்களுக்கான முறையான பாதுகாப்பை வேறு நபரிடம் தேடும் நிலைமாற வேண்டும். தன் பாதுகாப்பு தன்னிடமே உண்டு என்பதை ஒவ்வொரு பெண்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

பெண்கள் தாய்மை எனும் அற்புதமான வரத்தைப் பெற்றவர்கள். அவ்வாறிருக்க பெண்களைப் போதைப் பொருளாக–பொழுதுபோக்குப்பொருளாக – மட்டுமே பார்க்கும் இந்த சமுதாயம் மாறினால் மட்டுமே பெண்களுக்கு நிலையான பாதுகாப்பை வழங்க முடியும்.

இந்த உலகத்தின் சிறந்த படைப்பு பெண்கள். பெண்களால் மட்டுமே இந்த உலகு அழகுபடுத்தப்பட்டுள்ளது. நான் ஒரு பெண்ணாகப் பிறந்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். என்னுடைய கடந்த கால வாழ்க்கை இறுதிச்சுற்று எனும் படமாக வெளியிடப்பட்டுள்ளது. இன்று வரை எனது வாழ்க்கையை நானே பார்த்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் யாழ் .குடா நாட்டிலேயே பெண்கள் அதிகளவில் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும், பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்படுகின்றனர். மாலை 6 மணி என்பது பெண்களைக் கட்டிப்போடும் நேரமாக அமைந்து விட்டது. கோழி எவ்வாறு பகல் வேளைகளில் திரிந்து பின்பு அதற்கான நேரம் வந்ததும் ஒருகூட்டில் அடைந்து கொள்கிறதோ அது போலவே பெண்களின் வாழ்வும் மாறிவருகிறது.

இந்தக் கோழியின் வாழ்க்கை போன்றே பெண்களும் 6 மணிக்குப் பின் வெளி இடங்களுக்குச் செல்லக்கூடாது என்ற இறுக்கமான கட்டுப்பாட்டைத் திணித்துள்ளது இந்த பாழ்பட்ட சமுதாயம். பெண் சாதனையாளர்கள் உள்ள அந்த நாட்டிலே தான் பெண்களை அடக்கியாளும் நிலையும் காணப்படுகின்றது.

பெண்கள் கலாசாரத்துக்கு ஏற்ப உடையணிந்து இருக்கும் யாழ்.குடா நாட்டில் தான் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். சுதந்திரம் நாட்டுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. ஆனால் நாட்டில் வாழும் பெண்களுக்கு இல்லை என்பதையும் அவர் தெளிவாகக் கூறினார்.

தற்காப்புக் கலையின் சிறந்த தேசிய வீராங்கனையாகத் திகழும் நான் கற்ற இந்தக் கலையை என்னைப் போன்ற பெண்களும் கற்றுக் கொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் திறனை வளர்க்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டுயுத்த காலத்தின் பின்பு பெண்கள் உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் தம்மகத்தே பல வடுக்களைச் சுமந்து கொண்டு வாழ்கின்றார்கள். இவ்வாறுள்ள வடுக்களின் அடையாளங்களை முதலில் இல்லாதொழிக்க வேண்டும். அதற்கான ஒரு சிறந்த வழி காட்டலும் விழிப்புணர்வும் தேவைப்படுகின்றன.

சிறந்த வழிகாட்டல் இன்மையே பெண்கள் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்படக் காரணம். பெண்கள் தாம் சந்திக்கும் ஒவ்வொரு நபரிடமிருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கூடிய தேவையுள்ளது . அது அவள் அறிவுக்குத் தெரிந்தும் அதற்கான வழி தெரியவில்லை.

என்னுடைய வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டும் எனும் நோக்கத்துடனும் பெண்களுக்குச் சரியான வழிகாட்டலைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் நான் இந்தப் பயிற்சி நெறியை வழங்க வந்துள்ளேன்.

தற்காப்பு என்பது நமக்கு பிரச்சினை ஏற்படும் அந்தச் சூழ்நிலையில் இருந்து நம்மைப் பாதுகாக்க நாம் எடுக்கும் நடவடிக்கையே. இலங்கையில் பெண் பிள்ளைகள் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், வயதானவர்கள் ஏன் பிறந்த குழந்தைகளைக் கூட பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்துகின்ற நிலை உள்ளது.

பொதுவாக பிள்ளைகள் தமக்கான முதல் அறிவுரையை வீட்டில் பெற்றோர்களிடமிருந்தே கற்றுக் கொள்கிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கல்வியை மட்டும் புகட்டாது குறிப்பாக பெண் பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது தொடர்பான சிந்தனையை - விழிப்புணர்வை - வழங்க வேண்டும்.

பெண்கள் நம் நாட்டின் கண்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். 6 மணி என்னும் கட்டுப்பாடு உடைய வேண்டும். பெண்கள் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் காலம் வரும் போது ஒருநாள் கண்டிப்பாக 6 மணி கட்டுப்பாடு நிலை மாறும்.

பெண்களை யாரும் பாதுகாக்க மாட்டார்கள். நம்மை நாமே பாதுகாப்போம்.



# 65 வருடங்களின் பின் இணைந்த காதல் ஜோடி



65 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற இருந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்த கட்டாயப்படுத்தப்பட்ட பிரிட்டன் ஜோடி ஒன்று தற்போது திருமண பந்தத்தில் இணைந்திருக்கிறது.

குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினையால் இப்போது 82 வயதாகும் மோவாகெஸுக்கும் 86 வயதான அன்ரெவின் டெர்பிஷீருக்கும் 1951ஆம் ஆண்டு திருமணம் நடக்காமல் போயிற்று.

அன்ரெவின் மகள் டெபியே வில்லியம்ஸ், மோவாகெஸை தேடிக் கண்டுபிடித்து தாய்க்கு ஜோடி சேர்த்து வைத்தார். இந்த ஜோடி தீவிர காதலில் திளைத்திருக்கிறது.

அவர் ஓவிய கலைஞராக இருந்ததால் மணமகளின் தாய் திருமணத்துக்கு ஒப்புக் கொள்ளவில்லை. இதனால் அந்த ஜோடி தொடக்கத்தில் பிரிய வேண்டியதாயிற்று.

1950 ஆம் ஆண்டுகளில் ஓவிய கலைஞராக ஒரு மருமகன் இருப்பது மதிக்கப்படும் எதிர்கால தொழிலாகக் கருதப்படவில்லை என்று டெபியே வில்லியம்ஸ் கூறியிருக்கிறார்.

அந்நாள்களில் பெற்றோர் சொல்வதைப் போல நடந்து கொண்டதால், இந்த இணை மனமுடைந்து போனது.

தன்னுடைய தாய் மூன்றாவது முறையாக விதவையானபோது, மோவாகெஸை தேடிக் கண்டுபிடிக்கத் தீர்மானித்ததாக மகள் டெபியே வில்லியம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் பேசத் தொடங்கினர். உறவைப் புதுப்பித்துக் கொண்டனர். தீவிர காதலில் விழுந்தனர்.



அவர்களை நினைத்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் என்று மகள் தெரிவிக்கிறார்.

இந்த ஜோடிகளுக்கிடையே 5 துணைவர்கள் வந்து போய் வாழ நேரிட்ட பிறகும், கடந்த வெள்ளிக்கிழமை மதியம் பதிவு அலுவலகத்தில் திருமணம் செய்திருக்கின்றனர் என்று டெபியே வில்லியம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் காதலிப்பது போல் நீங்களும் யாரையாவது காதலித்தால், அது பயனில்லாமல் போகாது என்று மோவாகெஸ் கூறியிருக்கிறார்.

நான் அவரை வாழ்நாள் முழுவதும் காதலித்திருக்கிறேன். இப்போது அளவற்ற மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். இறுதியில் நாங்கள் ஒன்றாகியிருக்கிறோம் என்று மோவாகெஸின் புதிய மனைவி தெரிவித்திருக்கிறார்.

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

04

வேணு கிருஷ்ணா







பிரபஞ்ச அழகு ராணி அலி சியா மச்சாடோவிற்கு உளப்பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் டொனால்ட் ட்ரம்ப் நடந்து கொண்டமைபற்றி அறிந்திருக்கிறீர்கள். அது ட்ரம்ப் இன் நடத்தை பற்றிய ஒரு செறிவு குறைந்த மெல்லிய சம்பவம் மட்டுமே. ட்ரம்பின் தவறான வாழ்வின் பக்கங்களில் இழிவுகளும் கேவலங்களும் துஷ்பிரயோகங்களும் ஒழுக்க மீறல்களும் சட்டச்சர்ச்சைகளும் மலிந்து குவிந்து கிடக்கின்றன. அதைவிட அவரது ஒன்றுக்கு மேற்பட்ட திருமணவாழ்வின் தொடர் உடைவுகளும் அவற்றில் எண்ணற்ற விநோதமான பிடிவாதங்களும் வக்கிரங்களும் சட்டச் சர்ச்சைகளும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஊடகங்களால் ஆதாரங்களுடன் வெளியிடப்படுகின்றன.

மனித வாழ்வில் சமூகவியல் அம்சங்கள்(சமயம்,வர்க்கம். இனம்,மொழி, நிறம்), உளவியல் ஆழங்கள் (உள ஆரோக்கியம்), உயிரியல் அம்சங்களும் செயன்முறைகளும் (வயது,உயரம், நிறை, உடல் ஆரோக்கியம்,சட்டத்துக்கும் அற ஒழுக்கங்களுக்கும் கட்டுப்பட்ட ஆண்-பெண் பாலியலின்பம், ஆரோக்கியமான பரம்பரை உருவாக்கம்),பொருளாதாரம் (நிலம், உழைப்பு,மூலதனம்,முயற்சியாண்மை முதலியவற்றை ஈட்டிக்கொண்டிருத்தல் அல்லது ஈட்டிக்கொள்வதற்கான ஆற்றலுள்ள கல்வியும் திறன்களும்) ஆகிய அனைத்துக்குமாக ,அவையனைத்தும் கருத்திலெடுக்கப்பட்டு, அவற்றில் எவற்றிலாவது வேறுபாடோ விலகலோ பிறழ்ச்சிகளோ இருப்பின் அவை புரிந்து கொள்ளப்பட்டு-முடியுமானால் திருத்தப்பட்டு-திருத்தப்படமுடியாவிட்டால் சகித்துக் கொள்ளப்பட்டு, மரணத்தின் இறுதிக்கணம் வரை தொடர்ந்தாகவேண்டிய பாரிய உறவுச் சங்கிலிகளையும் உறவு வலைகளையும் பாசத் திரட்சிகளையும் கொண்டதே, மானிட வரலாற்றில் மிகமிக வயதில் மூத்த சடங்கான திருமணம் எனும் அற்புதமான உண்மை. வெள்ளைக்கார உளவியலாளர்களும் சமூகவியலா ளர்களும் இதனை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.சமகாலத்தில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் சமூகவியலாளர்கள் அவதானிக்கின்ற ஒரு சமூகத்தோற்றப்பாடு யாதெனில், அர்ப்பணிப்பான ஒரெயொரு கணவன் - அன்புமிகு ஒரேயொரு மனைவி- ஒழுக்கமும் பாசமும் மிக்க பிள்ளைகள் எனும் புனிதமும் தெய்வீகமும் பரிணமிக்கும் கட்டுக்கோப்பான நேர்மையான குடும்பவாழ்வுக்கும் இல்லறமே நல்லறமாக வாழும் மகிமைக்கும் உயர் மதிப்புக் கொடுக்கவும் அவ்வாறு தாங்கள் வாழவும் அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் பெரிதும் விரும்பிப் பாடுபடுகிறார்கள் என்பதாகும். விருப்பமும் இலட்சியமும் இருந்தாலும்,பொருத்தமான கல்வி வழிகாட்டல் ஆலோசனைகள் கிடைத்தும் அமெரிக்க, ஐரோப்பிய சமூகங்களில் கட்டுக்கோப்பான, நேர்மையான குடும்பவாழ்வு எட்டமுடியாத இலக்காகவே அறுபது வீதமானவர்களுக்குள்ளது. குடும்ப அங்கத்தவர்களின் அற்ககோல், புகைத்தல், போதைவஸ்துக்கள் பாவனைகள், பாலியல் துர்நடத்தைகள், ஓரினச்சேர்க்கை, இயற்கைக்கு மாறான ஒருபால் திருமணங்கள், இவற்றினால் விளையும் உடல், உள நோய் நிலைமைகள், சமூகவிரோதச்செயல்கள், குற்றவியல் குற்றங்கள், பொருளாதார வீழ்ச்சிகள், வேலைவாய்ப்பின்மை அல்லது வேலையிழப்பு ஆகியவற்றால் புனிதமும் தெய்வீகமும் பரிணமிக்கும் கட்டுக்கோப்பான நேர்மையான குடும்பவாழ்வும் இல்லறமே நல்லறமாக வாழும் மகிமையும் அமெரிக்க, ஐரோப்பிய சமூகங்களில் மட்டுமல்ல ஆசிய, ஆபிரிக்க சமூகங்களிலும் சிதைவடைந்துவருகின்றன.

அமெரிக்க-ஐரோப்பிய ஆய்வாளர்கள், சமூகவியலாளர்கள், சட்ட நிபுணர்களின் பார்வையில் டொனால்ட் ட்ரம்ப் பொருளாதார வீழ்ச்சியுட்பட்ட சில சிதைவுகளைத் தவிர மிகுதி அனைத்துக்குமே ஆட்பட்டவர். அத்துடன் மேலே சொல்லப்பட்ட அற்ககோல், புகைத்தல், போதைவஸ்துக்கள், பாலியல்துர்நடத்தைகள், ஓரினச்சேர்க்கை, இயற்கைக்கு மாறான ஒருபால் திருமணங்கள், இவற்றினால் விளையும் உடல், உள நோய் நிலைமைகள், சமூக விரோதச்செயல்கள், குற்றவியல் குற்றங்கள், பொருளாதார வீழ்ச்சிகள்,சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர் உரிமை மீறல்கள், பெண்களின் உரிமை மீறல்கள், வேலைவாய்ப்பின்மை அல்லது வேலையிழப்பு ஆகியவற்றுக்குள் அமெரிக்காவின் பல்வேறு சமூகங்களும் ஐரோப்பிய ஆபிரிக்க சமூகங்களும் ஏன் சில வேலைகளில் ஆசிய சமூகங்களும் மூழ்கிக் கொள்வதற்கான நிலமைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் உருவாக்கும் பிரமாண்டமான சூதாட்ட விடுதிகள், பிரமாண்டமான களியாட்ட விடுதிகள், அழகிகள்-அழகன்கள் சங்கமிக்கும் பாலியல் எழுச்சி நிகழ்ச்சிகள், கோடீஸ்வர மதுபானச் சாலைகள், பாலியல் சரக்குகள் நிறைந்த நீண்ட தொடர் ஒளி ஆவணங்கள், உற்சாகமும் கிளுகிளுப்பும் ஊட்டும் உண்ணத் தக்கவையுட்பட்ட அனைத்துவகை நுகர்வுகளையும்கொண்ட மாபெரும் வர்த்தக முறைமைகள், பாரிய விபச்சார வலையமைப்புத் தொகுதிகள் ஆகியவற்றின் உருவாக்கி யாகவும் உரிமையாளராகவும் காணப்படுகின்றார். அத்துடன் அப்பழிபாதகங்கள் மூலம் பெருக்கிய பாவமூடைகளாகிய பூதாகரமான சொத்துக்கள், பணம் ஆகியன காரணமாக உலகின் முன்னணி செல்வந்தர் களுள் ஒருவராகவும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் ஐந்து பணக்காரர்களுள் ஒருவராகவும் திகழ்கிறார்.






உலகின் மிகப் பூதாகரமான சமகால முரண்நகைகள் இரண்டு:

1)உலகிற்கு குற்றங்கள், உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் என்றால் என்ன எனப் பாடம் நடத்திக்கொண்டு, வேதம் ஓதும் சாத்தான் போல, தனது ஏகாதிபத்திய முதலாளித்துவ படை- பட்டாளங்கள் மூலம் அவற்றையெல்லாம் தான் இராணுவத்தலையீடு செய்த நாடுகளிலெல்லாம் செய்து, ஏழை நாடுகளின் இறைமைகளையும் வளங்களையும் பல்தேசியக் கம்பனிகள் மூலம் சூறையாடும் அமெரிக்க இராணுவவாதப் பித்தமும் சுரண்டல் முதலாளியவாதமுமேறிய இராட்சத முதலாளித்துவ மேலோங்கிகள் தமது கருவறையிலிருந்து டொனால்ட் ட்ரம்ப் எனும் அரசியல், பொருளாதார,இராணுவ ரீதியான விகார வடிவம் ஒன்றை அமெரிக்காவால் அமெரிக்காவுக்காக அமெரிக்காவின் முதலாளித்துவ ஜனநாயகத் தேர்தலில் பெற்றுக்கொண்டமையாகும். இடி தாங்கிய மடியென ஒவ்வொரு சாதாரண அப்பாவி அமெரிக்கனும் அடுத்த பல வருடங்களுக்கு அந்தப் பொல்லாத அலங்கோலமான ட்ரம்ப் குழந்தையை தாலாட்ட வேண்டியதுதான். இப்பொழுது தான் தான் உலகமெங்கும் விதைத்தவை தனது மடியிலேயே முளைத்தெழுந்திருப்பதும் அறுவடையும் தனக்கேயுரியது என்பதையும் அமெரிக்க முதலாளியம் புரியத்தொடங்கும்.

2) அற்ககோல், புகைத்தல், போதை வஸ்துக்கள், பாலியல் துர்நடத்தைகள், ஓரினச்சேர்க்கை, இயற்கைக்கு மாறான ஒருபால் திருமணங்கள், இவற்றினால் விளையும் உடல், உள நோய் நிலைமைகள், சமூகவிரோதச்செயல்கள், குற்றவியல் குற்றங்கள், பொருளாதார வீழ்ச்சிகள்,சிறுவர் துஷ்பிரயோகங்கள்-சிறுவர் உரிமை மீறல்கள், பெண்களின் உரிமை மீறல்கள்,வேலைவாய்ப்பின்மை அல்லது வேலையிழப்பு ஆகியவற்றுக்குள் அமெரிக்காவின் மக்களில் ஒரு பெரும் பகுதியினர் மூழ்கிப்போவற்கு காரணமாகவிருந்த அதே ஆள், அத்தீமைகளையும் குற்றச்சாட்டுக்களையும் வேறுவேறு தரப்பினர் மீதுசாட்டிக்கொண்டுதான் அவற்றிலிருந்து அமெரிக்க மக்களை மீட்கும் மீட்பர் எனக் கூறி, பாதிக்கப்பட்ட, சிதைந்த, தொழில் இல்லாத அல்லது இழந்த, ஏழை எளிய அமெரிக்க மக்களின் வாக்களிப்பு ஆதரவுடன் ஜனாதிபதியாகிறார்.

இவையே உலகின் மிகப் பூதாகரமான சமகால இரண்டு முரண்நகைகள் ஆகும்.


(தொடரும்)












“வரலாறு என்பது கால ஓட்டத்தைக் குறிப்பது அல்ல. அன்றி காலத்தின் கோலத்தைக் கணிப்பிட்டுக் கூறுவதும் அல்ல. வரலாறு என்றால் செத்துப்போன காலத்தின் புதைகுழிக்குள் உக்கிப்போன எலும்புகளைத் தேடுவதும் அல்ல. கடந்து போன நிகழ்வுகளைக் கால வரிசையில் நிரைப்படுத்தி விடுவதும் வரலாறு ஆகிவிடாது. வரலாறு என்பது மனித வாழ்வு பற்றியது. மனித சமூகத்தின் வாழ்வியக்கம் பற்றியது. அந்த அசைவியக்கத்தின் மாற்றத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உந்தியல்பான தன்மைகள், சக்திகள், விதிகள் பற்றியது. சாராம்சத்தில் வரலாறு என்பது மானிடத்தின் உயர் நிலை வளர்ச்சிப்போக்குப் பற்றியது.”




# உலக வரலாறும் மனித விடுதலையும்

வரலாறு என்றால் என்ன? அது எப்படி இயங்குகிறது? அது ஓர் அர்த்த பூர்வமான செல்நெறியிற் செயற்படுகிறதா? அதன் இயங்கு விதிகளை இனங்கண்டு கொள்வது சாத்தியமா? மானிடத்தின் உலகானுபவத்தை உள்வாங்கியபடி, மனித சமூக வடிவங்களை ஓர் உயர்ந்த படிநிலைக்கு இட்டுச் செல்லும் பரிணாம வளர்ச்சியை நோக்கி வரலாறு அசைந்து செல்கிறதா? வரலாற்றின் அசைவியக்கத்தை அடையாளம் கண்டு அதன் போக்கை, அது செல்லும் பாதையை, அதன் இலக்கை எதிர்வு கூற முடியுமா? வரலாற்று அசைவியக்கத்தின் இறுதி நோக்கு என்ன? வரலாறு எப்போது நிறைவுபெறுகிறது? அதற்கு ஒரு முடிவு உண்டா? இன்றைய சமூக சிந்தனை உலகில் இப்படியான பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இவற்றுக்கு விடையளிப்பதுதான் இந்த ஆய்வுக் கட்ரையின் நோக்கம்.

வரலாறு என்பது கால ஓட்டத்தைக் குறிப்பது அல்ல. அன்றி காலத்தின் கோலத்தைக் கணிப்பிட்டுக் கூறுவதும் அல்ல. வரலாறு என்றால் செத்துப்போன காலத்தின் புதை குழிக்குள் உக்கிப்போன எலும்புகளைத் தேடுவதும் அல்ல. கடந்து போன நிகழ்வுகளைக் கால வரிசையில் நிரைப்படுத்தி விடுவதும் வரலாறு ஆகிவிடாது. வரலாறு என்பது மனித வாழ்வு பற்றியது. மனித சமூகத்தின் வாழ்வியக்கம் பற்றியது. அந்த அசைவியக்கத்தின் மாற்றத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உந்தியல்பான தன்மைகள், சக்திகள், விதிகள் பற்றியது. சாராம்சத்தில் வரலாறு என்பது மானிடத்தின் உயர்நிலை வளர்ச்சிப்போக்குப்பற்றியது.

மானிடத்தின் வரலாற்றை பல்வேறு தனித்துவக் கூறுகளாகப் பிரித்து, பண்டைய நாகரிகங்கள் என்றும், பண்பாட்டு மையங்கள் என்றும், நாடுகள் என்றும், சமூகங்கள் என்றும், தனி மனிதர்கள் என்றும் மேற்கொள்ளப்படும் சரித்திர ஆய்வுகளும் இல்லாமலில்லை. வளர்ச்சி, எழுச்சி, வீழ்ச்சி என்ற முப்பரிமாண விதிகளின் அடிப்படையில் இந்த வரலாற்று ஆய்வுகள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றை மதிப்பாய்வு செய்வது எமது நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக் கொண்ட வரலாற்று ஆய்வு முறைமை வித்தியாசமானது. மனித வரலாற்றை கூறுபோட்டு நோக்காமல், மானிடத்தின், அதாவது மனித குலத்தின் ஒட்டுமொத்தமான வரலாறு பற்றியே நாம் இங்கு பார்ப்போம். முழுமனித வரலாறு என்னும் பொழுது, எல்லாக் காலங்களிலும் எல்லா மக்கள் சமூகங்களாலும் பெறப்பட்ட உலகானுபவத்தை உள்வாங்கியபடி ஒரு சீரான அசைவியக்கமாக மானிடத்தை ஓர் உன்னத படிநிலை வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்லும் வரலாறு பற்றியே நாம் குறிப்பிடுகிறோம். இத்தகைய ஓர் ஆழமான வரலாற்றுத் தரிசனத்திற்கு மூலகர்த்தாவாக விளங்கியவர் பிரபல ஜேர்மானியத் தத்துவ ஆசிரியரான ஹேகல் (Hegel) ஆவார். ஹேகலின் வரலாற்றுத் தத்துவத்தை செழுமைப்படுத்தி, விரிவுபடுத்தியவர் காள்மாக்ஸ். ஆகவே, மானிட வரலாறு பற்றிய ஓர் ஆழமான பார்வையை நாம் பெற்றுக்கொள்வதாயின், ஹேகலதும் காள்மாக்ஸினதும் சிந்தனை உலகங்களைத் தரிசித்துக் கொள்வது அவசியம். காள்மாக்ஸின் வரலாற்றுக் கோட்பாட்டைப் புரிந்து கொள்வதாக இருந்தால், முதலில் ஹேகலின் தத்துவத்தைப் படித்தறிவது அவசியம் என்று லெனின் அடிக்கடி வலியுறுத்துவார். இந்தக் கூற்றில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

அன்றைய ஜேர்மானிய கருத்துலகின் திருமூலராக ஹேகல் விளங்கினார். அவர் படைத்த எண்ண உலகம் மாக்ஸ் போன்ற அன்றைய இளம் சிந்தனையாளர்கள் மீது ஆழமான தாக்கத்தைப் பதித்தது. ஹேகலின் தத்துவத்தை மாக்ஸ் கடுமையாக விமர்சித்தார். அகவயமான ஆன்மீக வாதம் எனச் சாடினார். எனினும், ஹேகலின் கருத்துலக ஆதிக்கத்திலிருந்து அவர் முற்றுமுழுதாக விடுபட்டவராக இல்லை. ஹேகலின் இயங்கியலும் வரலாற்றுத் தத்துவமும் காள் மாக்ஸை வெகுவாக ஆகர்சித்துக் கொண்டன. ஆன்மீக உலகத்தில் புதைந்து போயிருந்த ஹேகலின் இந்த சிந்தனைக் கருவூலங்களின் பொருளிய உலகத்தை விளக்கும் அறிவியல் கோட்பாடுகளாக மாக்ஸ் மாற்றியமைத்தார் எனக் கூறுவது பொருத்தமாகும். இதனால்தான் மாக்ஸியத்தை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கே ஹேகலின் தத்துவத் தைப் படிக்க வேண்டும் என லெனின் கூறினார்.

ஹேகலின் தத்துவத்தைப் புரிந்துகொள்வது என்பதும் இலகுவான விடயம் அல்ல. மிகவும் கனமான, ஆழமான கருத்துக்களை மிகவும் தெளிவற்ற பூடகமான வார்த்தைகளில் மிகவும் சிக்கலான முறையில் விவரிப்பதில் அவர் வித்தகர். வரலாறு பற்றி அவர் விளக்கும் (Phenomenology of the mind, philosophy of history), என்ற நூல்கள் இத்தகைய சொற்புதிர்கள் நிறைந்தவை. உதாரணமாக மனம் என்று அவர் பிரயோகிக்கும் சொல் பல்வேறு அர்த்த பரிமாணங்களைக் கொண்டது. அவரது மொழியில் 'மனம்' என்பது சாதாரண மனித மனதை மட்டும் குறிப்பிடுவது அல்ல. அது மனித ஆன்மாவைக் குறிப்பிடும். மானிடத்தின் கூட்டு மனதையும் அது குறிப்பிடும். அதேவேளை, அண்டம் எங்கும் வியாபித்து நிற்பதாக அவர் கருதும் பிரபஞ்ச மனதையும் அது பொருள்படுத்தும். அதே சமயம் அது மெய்ப் பொருளையும் குறிக்கும். மெய்யுண்மையாக அவர் கருதும் பரிபூரணத்துவத்தையும் குறியீடு செய்யும். தனிமனித மனம், மானிட மனமாக, பிரபஞ்ச மன மாக, ஆத்மாவாக, பரமாத்மாவாக, மெய்யுண்மையாக, சகலத்தையும் உள்ளடக்கிய முழுமையாக, பரிபூரணத்துவமாக எல்லாம் வல்ல கடவுளாக அர்த்த பரிமாணம் கொள்ளும்.

இந்தப் பிரபஞ்ச மனதின் அசைவியக்கத்தையே வரலாறு என்கிறார் ஹேகல். இந்த அசைவியக்கமானது பிரபஞ்சத்திலிருந்து மனித வாழ்க்கை வரை வியாபித்து நிற்கிறது. அது எல்லாவற்றையும் நகர்த்திச் செல்லும் மாபெரும் இயங்கு சக்தியாக அசைகிறது. இந்தப் பேரசைவு ஒரு முரணிய இயக்கமாக சகலதையும் படைத்து, சகலதையும் அசைத்து, சகலதையும் அழித்து, ஒவ்வொரு படிநிலையாக, முழுமையை நோக்கி முன்னேறிச் செல்கிறது. இன்னோர் அர்த்தத்தில் வரலாறு என்பது இறைவனின் பிரபஞ்ச நாடகம்.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*''இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*



வவுனியாவில் இடம்பெற்ற
சிவசேனை அமைப்பின் ஆரம்ப நிகழ்வு

# சைவ சித்தாந்தம் பேணி தமிழ்த் தேசியம் காப்போம்!

வைத்தியர். கி.பிரதாபன்

இலங்கைச் சிவசேனை தன்பால் முன்வைக்கப் பட்டுள்ள விமர்சனங்களுக்கு தனது ஆக்கபூர்வமான செயற்பாடுகள் ஊடாகப் பதிலளித்து வருகின்றமையை ஒவ்வொரு தமிழரும் வரவேற்க வேண்டும் – ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர் ஓர் கட்டமைப்பாக இல்லாதவரை தமிழகமாயினும் சரி, இலங்கையாயினும் சரி எதையும் சாதிக்க முடியாது. சைவ சமயம் தமிழரைக் கட்டமைப்பதற்குரிய தமிழ்த் தேசியத்துக்குரிய தளத்தைக் கொண்டது.

மணிப் பிரவாளத்தில் மயகிப் போயிருந்த தமிழருக்கு நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, தமிழ்த் தாத்தா சாமிநாத ஐயர் என்று தமிழை இலக்கண இலக்கிய ரீதியில் புத்துயிர் அளித்து, மங்கிப் போயிருந்த தமிழ்த் தேசியத்துக்கு மீண்டும் வீறுகொண்டெழ களம் அமைத்துக் கொடுத்தனர். அந்தக் களத்தை மறை மலையடிகள் தனித்தமிழ் இயக்க மாக வளர்த்து, மணிப் பிரவாளத்திலிருந்து தமிழை மீட்டெடுத்த தோடு, தமிழ்த் தேசியத்தையும் படைத்தார் என்றால் அது மிகையில்லை.

தமிழ், சைவத்தோடு இணைந்திருந்தபோது அது மங்காப் புகழோடுதான் இருந்தது. தமிழ்த் தேசியமாகவும் உருவெடுத்தது. எப்போது திராவிட இயக்கங்கள் செல்வாக்குப் பெற்றனவோ – அன்று சைவத்தை தமிழில் இருந்து ஒதுக்கினர். தமிழ்த் தேசியமும் தமிழகத்தில் மங்கிற்று.

இலங்கையில் தமிழர் சைவத்தில் இரண்டற கலந்திருந்தமையால் தமிழ்த் தேசியத்துக்குரிய கருவைப் பேணியே வந்தனர். கிறிஸ்தவரான தந்தை செல்வா தமிழ்த் தேசத்தின் கொடியாக நந்திக் கொடியையே அங்கிகரித்தார். அதேநேரத்தில் கிறிஸ்தவரான தந்தை செல்வாவைத் தமிழர் தந்தையாய் அனைத்துத் தமிழரும் கொண்டாடுவதற்குரிய மனவளத்தையும் யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வமாகி மாதொரு பாகனாரே வருவர் என்கின்ற சைவசமயம் கொடுத்திருந்தது.

தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் சைவத்தைப் புறக் கணிக்க, அது தமிழ்த் தேசியத்துக்கு பாதகமான விளைவுகளையே உருவாக்கியது.

இலங்கையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தைத் திராவிடவாதிகள் தமது கருத்து சார் ஆளுமையில் கொண்டு வந்ததும், பழனியில் மொட்டை போடுதல், கோயிலில் திருமணம் செய்தல், வற்றாப்பளையில் பொங்கல் என்று உயத்தைப் வெளிப் பெடையாகப் பேணி வந்த தமிழ் இளைஞர், சமய நடவடிக்கைகள் மூலம் சமயத்தைப் பிரநிதித்துவப்படுத்துவதிலிருந்து ஒதுங்கினர்.

அதன் பின்னரான தமிழ்த் தேசியம் சைவசமயத்தில் இருந்து ஒதுங்கியே அல்லது சைவ சமயத்தை ஒதுக்கியே பேணப்பட்டது. ஆனால் ஆக்கபூர்வமான முன்னேற்றங்களைச் சந்திக்கவில்லை.

தமிழ்த் தேசியமானது சைவ சமயத்தைத் தன்னோடு இணைத்து நடைபோடுமாயின் அது இன்னும் ஆணித்தரமானதாக வலுப்பெறும் வாய்ப்பு அதிகம் உண்டு.

இராச இராச சோழன் சைவத்தோடு தமிழைக் கண்டபோது மலேசியாவரை ஆதிக்கம் செலுத்தினான். அதேநேரத்தில் சமண, பௌத்த, வைணவ சமயங்களையும் அரவணைத்தான். இராச இராசனின் பல்சமய



அனுராதபுரம் அம்மன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட
மூலவிக்கிரகத்தைப் பார்வையிடும் சிவசேனை

அரவணைப்பு சைவ சமயம் கொடுத்த சால்பு.


ஆக, சைவசமயமே தமிழ்த் தேசியத்தின் உரமும் உயிர்நாடியும் ஆகும்.

சிங்கள மக்கள், தமது வரலாற்று பகுத்தாய்வுகளில் ஈடுபட்டு தமது பண்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்காது, புத்தாண்டு நடைமுறைதொட்டு புத்தர்வரை எல்லோரையும் சிங்கள மயப்படுத்தி, பௌத்தத்தைத் தளமாகக் கொண்டு நன்கு தம்மைக் கட்டமைத்ததன் ஊடாக சிங்களத் தேசியத்தைப் பேணுகின்றனர். அதுவே அவர்களின் வெற்றிகளுக்கு காரணமாயிற்று. இலங்கை இஸ்லாமிய அமைப்புக்கள் இலங்கையில் சமஸ்டியே தேவை இல்லை என்று கூறுவதோடு இலங்கை பௌத்த நாடு என்கின்றன. சிங்களப் பேராயர்கள் இலங்கை பௌத்த நாடு என்கின்றனர். இவை சிங்களத் தேசியத்தை, பௌத்தத்தைத் தளமாகக் கொண்டு சிங்கள மக்கள் கட்டமைத்தமையால் அவர்கள் பெற்ற பலனாகும்!!!

ஆனால் தமிழர்களாகத் திராவிட அரசியலில் வீழ்ந்து, அனைத்தையும் பகுத்தறிவு என்ற பெயரில் கேள்விக் குள்ளாக்கி, வெய்யில்த் தேசத்தில் கருப்பு ஆடைகளோடு அலையும் மந்தைகளாயினர். சைவசமயத்தை அந்நியப் படுத்தியபோதே தமிழ்த் தேசியத்துக்கும் சங்கு ஊதினர்.

சிலர் தமிழ்த் தேசியம் மத சார்ப்பற்றது என்கின்றனர். அவர்கள் தமிழ்த் தேசியத்தை வென் றெடுத்தால் மகிழ்ச்சி!!! ஆனால் எனது பங்கு, தமிழ்த் தேசியத்துக்குரிய உயிர்நாடியின்இருப்பை எப்போதும் உறுதிசெய்தலே ஆகும்.

தமிழரின் சித்தாந்த சைவத்தில் தமிழ்த் தேசியத்தின் உயிர் நாடி பேணப்படுவதால், சைவசமயத்தை நாம் பேண வேண்டியது தவிர்க்க முடியாதது. அதனை நமது அடுத்த சந்ததிக்கு வழங்கினால் நிச்சயமாகத் தமிழ்த் தேசியம் மீண்டும் ஆலமரமாய் விருட்சம் கொள்ளும்.



# இலங்கையின் அருகே தாழமுக்க நிலை; குடாநாட்டில் மழை நீடிக்க அதிக வாய்ப்பு

## தற்போது தமிழ்நாடு எங்கும் சீரற்ற காலநிலை

சென்னை,நவ.15

இலங்கை அருகே குறைந்த காற்றழுத்தத் தாழமுக்க நிலை நீடிப்பதால் அடுத்த 2 நாள்களுக்கு தமிழ்நாடு முழுவதும் அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும் இவ்வாறான கால நிலையால் யாழ். குடாநாட்டிலும் பரவலாக மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை அவதான நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை–

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை காலம் தொடங்கியுள்ள போதிலும் இன்னும் சரியாக மழை பெய்யவில்லை.

இந்த நிலையில் தற்போது வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மைய இயக்குநர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்ததாவது:–

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை கடந்த சில நாள்களாக வலு இழந்து காணப்பட்டது.

அந்த நிலை மாறி வடகிழக்கு பருவ மழை வலுப்பெற்று உள்ளது.

வங்கக் கடலில் இலங்கைக்கு அருகே தமிழக கடற்பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நிலை கொண்டுள்ளது.

இதன் காரணமாக அடுத்து 2 நாள்களுக்கு தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் அநேக இடங்களில் மிதமான மழை பெய்யும்.

உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும்.

சென்னையில் சில பகுதிகளில் சில நேரங்களில் மிதமான மழை பெய்யும்.

தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, ராமநாதபுரம், நாகப்பட்டினம் ஆகியவற்றில் தொடர்ந்து மழை பெய்யும்.

இந்த மாவட்டங்களில் மழை 18 ஆம் திகதி வரை நீடிக்கும். – என்று தெரிவித்தார்.

இதேவளை, யாழ்ப்பாணத்தில் மழை பரவலாக பெய்து வருகின்றது. தமிழ்நாடு வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிவித்தலின்படி யாழ்ப்பாணத்திலும் மழை தொடரக் கூடிய சாத்தியம் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## 70 நீதிபதிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு,நவ.15

நாட்டின் நீதிமன்றங்களில் பணியாற்றும் 70 நீதிபதிகள் நீதிச் சேவை ஆணைக் குழுவால் வருடாந்த இடமாற்ற நடை முறையின் கீழ் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகளில், கொழும்பு பிரதம நீதிபதி ஜி.ஏ.வி.பிலப்பிட்டிய மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கை விசாரித்து வருகின்ற கல்கிஸ்ஸ நீதிவான் ஏ.எம்.எம்.சகாப்தீன் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் தற்போது குருநகரில் உள்ள சிறு வர் பெண்கள் நீதிமன்றில் நீதிவானாக பணியாற்றும் திருமதி கறுப்பையா ஜீவராணி யாழ்ப்பா ணம் மேலதிக நீதிபதியாகவும் அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றும் திருமதி என்.கந்தசாமி பருத்தித்துறை நீதிவானாகவும் இடமாற்றப்பட்டுள்ளனர். (ம)



நீளம் பாய்தல் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி சிவகுமார் ஆரணியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலை மைதானத்தில் நீளம் பாய்தலுக்கான விளையாட்டுத் திடல் நிர்மாணித்து கையளிக்கும் நிகழ்வும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் கௌரி சேதுராஜா தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலை மைதானத்தில் நீளம் பாய்தலுக்கான விளையாட்டுத் திடலை நிறுவனத்தின் தலைவரும் ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதம் திறந்து வைத்ததார். நிகழ்வில் வடமராட்சி கல்வித் திணைக்களப் பணிப்பாளர் நந்தகுமார், வட மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், தர்மலிங்கம், சிவயோகன், அகிலதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாணவி கௌர விக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (ஐ-24)



வடமாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ், அல்வாய் இந்து தமிழ் கலவன் பாட சாலைக்கு ஒரு தொகுதி கதிரைகளை வழங்கியுள்ளார். பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவர் வடமாகாணசபையின் 2016 ஆம்ஆண்டுக்கான நிதி ஒதுக் கீட்டில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகளைப் பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (ஐ-40)

மீனவர் பிரச்சினையைக் கையாள்வதற்கு

## இலங்கை - இந்திய கடற்படை கூட்டு ரோந்து: பரிசீலிக்கத் தயார் என்று புதுடில்லி அறிவிப்பு!

புதுடில்லி,நவ.15

இலங்கை –இந்திய மீனவர் இடையேயான பிணக்கைத் தீர்த்து வைக்கும் ஓர் எத்தனமாகப் பாக்கு நீரிணையில் இலங்கை - இந்தியக் கடற்படைகள் கூட்டு ரோந்தில் ஈடுபடலாம் என்ற இலங்கையின் யோசனையைப் பரிசீலிக்கலாம் என்று சரித்திர பூர்வமான ஒரு முடிவுக்கு புதுடில்லி முதல் தடவையாக வந்திருக்கின்றது.

'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

கடலின் ஆழம் வரை வலை போட்டு கடல் வளத்தை கூண்டோடு அள்ளி எடுக்கும் மீன்பிடி முறையைக் கைவிடுவதற்கான தீர்மானத்தை விரைந்து செயற்படுத்துவதற்கு இந்தியா முன் வந்திருப்பதும்மற்றொருமுக்கிய அம்சம் என்றும் அந்தச் செய்தி தெரிவிக்கின்றது.

எல்லை மீறிமீன்பிடித்தமைக்காகக் கைது செய்யப்படும் மீனவர்களைவிடுவிக்கும்விடயத்தில் வழமையான தர நடவடிக்கைகளை முன்னெடுக்கும் திட்டத்துக்கான ஏற்பாடுகளுக்கு இந்தியா இணங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சம் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டது. (ம)

## சாவகச்சேரியில் ரவிராஜுக்குச் சிலை ஞாயிறு திறந்து வைப்பார் சம்பந்தன்

சாவகச்சேரி, நவ.15

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ந. ரவிராஜின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அன்னாரின் உருவச்சிலை திறப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியில் நடைபெறும்.

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள சிலையை எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் திரை நீக்கம் செய்து வைப்பார்.

அமைச்சர் மனோ கணேசன், நவ சமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள், உறுப் பினர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் அமரர் ந. ரவிராஜின் சேவைகளை உள்ளடக்கிய இறுவட்டு வெளியீடும் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட சிற்பக் கலை விரிவுரையாளர் மனோகரனால் ந.ரவிராஜின் ஏழரை அடி உருவச்சிலை உருவாக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சமூக சேவையாளர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.15

யாழ். முஸ்லிம் மக்களைக் கவர்ந்த சமூகசேவையாளரான கொடைவள்ளல் மர்ஹூம்.யூ.எம்.ஐதுரூஸின் 50 ஆவது நினைவு தினம் கடந்த சனிக்கிழமை யாழ். முஸ்லிம் பகுதியில் உறவினர்களால் நினைவு கூரப்பட்டது.

இதன் முதல் நிகழ்வாக யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் முன் மதில் வர்ணம் தீட்டப்பட்டது. இந்த சுற்று மதிலையும் அதற்கான 'கேற்'றையும் 50 வருடங்களுக்கு முன்னர் இவர் நிர்மாணித்துக் கொடுத்துள்ளார். ஏழை மக்களின் அபிமானத்தைப் பெற்றுள்ள மர்ஹூம் ஐதுரூஸை அரசியல் மேதை ஜி.ஜி. பொன்னம்பலம், அல்பிரட் துரையப்பா மற்றும் அக்காலத்தில் பணியாற்றிய அமைச்சர்களான பதியூதீன் மஹ்முத், எம்.எச். முகம்மது போன்றவர்கள் சந்தித்து சேவையைப் பாராட்டியுள்ளார்கள். அன்னாரின் ஞாபகார்த்த நிகழ்வுகள் எதிர்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன என்று மகன் சாகுல் ஹமீட் தெரிவித்துள்ளார். (இ-19)

# நாட்டு மக்களுக்காக உயிரையும் கொடுப்பேன்!

## கண்ணீர் மல்கக் கூறினார் இந்தியப் பிரதமர் மோடி



கோவா, நவ.15

கறுப்புப் பண ஒழிப்பு வேட்டையின் அடுத்தகட்டமாக பினாமி சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ள பிரதமர் மோடி மக்களுக்காக உயிர்த் தியாகம் செய்யவும் தயாராக உள்ளேன் என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

கோவாவின் பனாஜி நகரில் கிரீன் பீல்ட் விமான நிலையத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே மோடி இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கறுப்புப் பணம் என்ற நோய் இந்தியாவை 70 ஆண்டுகள் பீடித்து இருந்தது. எங்களது 17 மாத ஆட்சியில் இந்த நோயைத் தீர்க்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலின்போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற உழைத்துக் கொண்டு இருக்கிறேன். ஊழல்வாதிகள் சட்டவிரோதமாகச் சேர்த்து வைக்கும் சொத்துக்களை பறிமுதல் செய்வேன்.

சுதந்திரத்துக்குப் பின்னாளில் இருந்து நாட்டில் நடைபெற்றுள்ள ஊழல்களை வெளிப்படுத்துவேன். இதற்காக ஒரு லட்சம் இளைஞர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

அடுத்தகட்டமாக பினாமிகள் பெயரில் சொத்துக்கள் வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்.

ரூ.500, ரூ.1000 தாள்கள் செல்லுபடியாகா என்று மத்திய அரசின் அறிவிப்பு மிகச் சரியான நடவடிக்கையாகும். இதற்கு மக்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

10 மாதங்களாக திட்டமிட்டு ரூ.500, ரூ.1000 தாள்களை செல்லுபடியாகா என்று அறிவித்துள்ளோம். இது, கறுப்புப் பணத்துக்கு எதிரான நடவடிக்கை என்பது மக்களுக்கு தெரியும்.

மத்திய அரசின் நடவடிக்கையில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்ட மக்களுக்கு நன்றி. நான் ஏதாவது தவறு செய்திருந்தால் இந்த நாடு அளிக்கும் எந்த தண்டனையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

நாட்டுக்காக எனது குடும்பத்தைத் துறந்து குஜராத்தில் இருந்து டில்லி வந்திருக்கிறேன்.

நாட்டுக் காக என்னை நெருப்பில் போட்டு எரித்தாலும் தாங்கிக் கொள்ளத் தயார். நாட்டுக்காக எந்தத் தியாகத்துக்கும் தயாராக இருக்கிறேன். ஊழலற்ற இந்தியாவை உருவாக்குவேன்.

ஏ.ரி.எம்.களில் மக்கள் நிற்பது மத்திய அரசின் நிலைப் பாட்டுக்கு எதிரானது அல்ல. இரவு பகல் பாராமல் உழைக்கும் வங்கி ஊழியர்களுக்கு நான் கடமைப் பட்டு இருக்கிறேன். சிரமங்கள் இருந்தாலும் மத்திய அரசின் முயற்சியை வெற்றி பெறச் செய்துள்ளனர். மக்கள் ஆதரவு இருப்பதால் தான் மத்திய அரசின் இந்த முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

கறுப்புப் பண ஒழிப்புக்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையால் இன்னும் 50 நாள்களுக்கு மட்டும் பாதிப்பு இருக்கும்.

பொருளாதாரத்தை சுத்தப் படுத்திய பின்பு ஒரு கொசு கூட பறக்க முடியாது. 2 ஜி ஊழலால்தான் மக்கள் ரூ.4 ஆயிரத்துக்கு வரிசையில் காத்துக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கறுப்புப் பணம் பதுக்கியவர்கள் பற்றி விசாரிக்க குழு அமைக்கப்படும். இதில் இருந்து ஒரு போதும் பின் வாங்கமாட்டோம். எனக்கு எதிராகத் திரண்டிருக்கும் சக்திகளைப் பற்றி எனக்குத் தெரியும்.

அவர்கள் என்னை வாழவிட மாட்டார்கள். 70 ஆண்டு களாக கொள்ளையடித்து சேர்த்துவைத்த பணத்துக்கு ஆபத்து என்பதால் அவர்கள் என்னை வாழவிட மாட்டார்கள். நான் தயாராக இருக்கிறேன்.

இந்தியாவில் இருந்து பணம் கொள்ளை போவதை நாங்கள் தடுத்துள்ளோம். இது எங்களது கடமையாகும்" என்றார். (எ)

## நவ.24 வரை செல்லுபடியாகும் ரூ. 500, 1000தாள்கள்

டில்லி, நவ.15

பழைய 500 மற்றும் 100 ரூபா தாள் கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. செல்லாத தாள்களால் மக்கள் திண்டாடி வருகின்றனர். இதன் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார விவகாரங்களுக்கான செயலாளர் சக்திகாந்த் தாஸ் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட அமைச்சர்களுடன் மோடி நேற்று முன்தினம் இரவு நடத்திய அவசர ஆலோசனையின்போது, இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் 24 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை பழைய தாள்கள் மேற்சொன்னபடி, அரச மருத்துவமனைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஆகியவற்றில் செல்லுபடியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கூடங்குளம் 2 ஆவது அணு உலையில் மின் உற்பத்தி நிறுத்தம்

திருநெல்வேலி, நவ.15

கூடங்குளம் 2 ஆவது அணு உலையில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்ய நாட்டு உதவியுடன் தலா ஆயிரம் மெகாவாற் திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இதில், 2 ஆவது அணு உலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் மின் உற்பத்தி ஆரம்பித்தது.

இந்த உலையில் மின் உற்பத்தி படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. 750 மெகாவாற் அளவுக்கு மின் உற்பத்தி செய்ய இந்திய அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையம் அண்மையில் அனுமதி அளித்தது.

இதற்கு பல்வேறு சோதனைகள் மேற்கொள்ள வசதியாக இந்த அணு உலையில் மின் உற்பத்தி சனிக்கிழமை இரவு நிறுத்தப்பட்டது. அணு உலையின் டர்பைன் உள்ளிட்ட அனைத்து உபகரணங்களும் ஒருவார காலம் முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன. அதன் பின்னர் மீண்டும் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று, அணுமின் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

## புதிய ரூ: 2000 தாள்களில் புதிய ஆளுநர் கையெழுத்து



சென்னை, நவ.15

தற்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ள புதிய 2000 ரூபா தாளில் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் கையெழுத்தில் புதிய ஆளுநர் உர்ஜித் படேல் கையெழுத்திட்டுள்ளார். இது சர்ச்சையை எழுப்பியுள்ளது.

கடந்த 8 ஆம்திகதி பிரதமர் மோடி 500, 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகா எனவும் அதற்குப் பதிலாக புதிய 500, 2000 ரூபா தாள்கள் வழங்கப்படும் என்றும் கூறினார்.

இந்த புதிய ரூபா தாள்களை அச்சிடும் பணி கடந்த 6 மாதங்களுக்கு முன்னதாகவே ஆரம்பித்ததாகக் கூறப்பட்டது.

ஆனால் தற்போது வெளிவந்துள்ள புதிய 2000 ரூபா தாள்களில் ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநரான உர்ஜித் படேலின் கையெழுத்து உள்ளது.

இவர் கடந்த செப்ரெம்பர் 4 ஆம் திகதி தான் பொறுப்பேற்றார். எனவே புதிய ரூபா தாள் 6 மாதங்களுக்கு முன்னரே அச்சடிக்கப்பட்டிருந்தால் அப்போதைய ஆளுநர் ரகுராம் ராஜனின் கையெழுத்து தானே இருக்க வேண்டும் என்று பலரும் சமூக வலைத்தளத்தில் கேள்வி எழுப்பி வருகின்றனர். (எ)

## மாக்சிஸ்ட் கம்யூ. சார்பில் நாளை கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ.15

மாற்று ஏற்பாடுகளை அரசு முன்னெடுக்கும் வரை பழைய 500, 1000 ரூபா தாள்களின் பயன்பாடு தொடரவேண்டும் என்று வலியுறுத்தி மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநிலம் முழுவதும் நாளை புதன்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக அந்தக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில சிறப்பு மாநாடு நெல்லையில் கடந்த 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் நேற்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:வருமாறு.-

500, 1000 ரூபா தாள்கள் இனிமேல் செல்லுபடியாகா என்ற அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து, சாதாரண மக்கள் மிகுந்த துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்த முடிவு ஏற்படுத்தும் விளைவுகளை எதிர்கொள்ள எவ்விதத் தயாரிப்பையும் செய்யாமல் மத்திய அரசு மக்களைத் திண்டாட விட்டிருக்கிறது. அன்றாட நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. அத்தியாவசியப் பொருள்களை வாங்க முடியவில்லை. சம்பளம் வழங்குவதில் சிரமம் நிலவுகிறது. சாதாரண நிலை திரும்ப இன்னும் 3-4 வாரங்கள் ஆகும் என்று அரசுத் தரப்பில் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கை உண்மையிலேயே கறுப்புப் பணத்தை மீட்டெடுக்க உதவாது என்பதுடன், சாதாரண மக்களின் வாழ்க்கையை முடக்குவதாகவும் அமைந்திருக்கிறது. இந்தச் சூழலில், மாற்று ஏற்பாடுகளை அரசு செய்யும் வரை, பழைய ரூபாய் தாள்களின் பயன்பாடு தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் என்று மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு அறைகூவல் விடுத்துள்ளது.

இந்த அறைகூவலின் அடிப்படையில் நாளை தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களிலும், வாய்ப்புள்ள பகுதிகளிலும் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தலைவர் பதவியிலிருந்து விலகுகின்றார் சோனியா



டில்லி, நவ.15

பஞ்சாப், உத்தரப்பிரதேச சட்டசபைத் தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து சோனியா விலக முடிவு செய்துள்ளார் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

காங்கிரஸ் கட்சிக்கு ராகுல்காந்தியை தலைவராக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த சில ஆண்டுகளாக விடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது காங்கிரஸ் தலைவராக உள்ள சோனியாவுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பதால், அவர் கட்சிப் பணிகளை ராகுலிடம் ஒப்படைத்து விட்டு ஒதுங்குவது நல்லது என்று அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

ஆனால் ராகுல் பிரசாரம் செய்யும் மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு தொடர் தோல்வி ஏற்படுவதால் இப்போது தலைமைப் பொறுப்பை அவருக்கு விட்டுக் கொடுக்க, சோனியா தயக்கம் காட்டுகிறார். அதைத் தொடர்ந்து டில்லியில் சமீபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் குழுக் கூட்டத்தில் சோனியாவுக்கு, அவரது பதவிக் காலத்தை இன்னும் ஓராண்டுக்கு நீடித்து தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் அதே கூட்டத்தில் ராகுலை தலைவராக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. அதை அடுத்து காங்கிரஸ் காரியக் குழுக் கூட்டம் விரைவில் கூட்டப்படும் என்றும், அதில் ராகுலுக்கு தலைவர் பதவி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. குறிப்பாக எதிர்வரும் 19 ஆம் திகதி இந்திரா காந்தி பிறந்த தினத்தன்று ராகுல் தலைவராகும் அறிவிப்பு வெளியாகும் என்று காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. ஆனால் தற்போது அதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. பஞ்சாப், உத்தரப் பிரதேசம், கோவா மாநிலங்களில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான நடைமுறைகள் ஆரம்பித்துவிட்டன. (எ)

## காஷ்மீர் எல்லையில் இன்று பாடசாலைகள் திறக்கப்படும்

ஜம்மு, நவ.15

ஜம்மு-காஷ்மீர் எல்லையில் உள்ள 174 பாடசாலைகள் மீண்டும் இன்று முதல் திறக்கப்பட உள்ளன.

காஷ்மீரில் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற கலவரம், பாகிஸ்தான் அத்துமீறல் உள்ளிட்ட பிரச்சினைகளால் பாடசாலைகள் மூடப்பட்டு, மாணவர்கள் வீட்டிலேயே இருக்கும் நிலை ஏற்பட்டது. இந்தநிலையில் இன்று முதல் பாடசாலைகள் இயங்கும் என அந்த மாநில அரசு அறிவித்துள்ளது. மேலும் ஜம்மு-காஷ்மீர் பாடசாலைகளில் சுமார் 55 ஆயிரம் மாணவர்கள் இன்று பத்தாம் வகுப்பு பரீட்சை எழுதவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஜாக்கிசானுக்கு ஒஸ்கார் விருது



லொஸ் ஏஞ்சல்ஸ், நவ.15

பிரபல நடிகர் ஜாக்கிசானுக்கு ஒஸ்கார் விருது வழங்கப்பட்டது.

ஹொங்கொங்கில் பிறந்த பிரபல நடிகர் ஜாக்கிசான் 1960 ஆம் ஆண்டு ஹொலிவுட் திரைப் படத் துறையில் நுழைந்தார். நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர், சண்டைப் பயிற்சிக் கலைஞர் என பன்முகத் திறமை கொண்ட இவர், 200 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.


குங்பூ உள்ளிட்ட தற்காப்புக் கலைகளைப் பயின்றுள்ள ஜாக்கிசான், அவற்றைத் தனது திரைப் படங்களிலும் திறம்படப் பயன்படுத்தி வந்தார். அதிரடிச் சண்டைக்காட்சிகளுடன் கூடிய நகைச் சுவைத் திரைப்படங்களை வழங்குவதில் அவர் வல்லவர். இவ்வாறு வெளியான அவரது பல்வேறு படங்கள் உலகிலுள்ள கோடிக் கணக்கான ரசிகர்களை அவருக்கு பெற்றுத்தந்தன.

சினிமா உலகில் 56 ஆண்டுகளாகப் புகழ்பெற்று விளங்கும் ஜாக்கிசான் ஏராளமான உள்நாடு மற்றும் சர்வதேச விருதுகளை வென்றுள்ளார்.

எனினும் திரைத்துறையின் மிக உயரிய விருதான ஒஸ்கார் மட்டும் அவருக்கு எட்டாக் கனியாக இருந்து வந்தது. தற்போது 62 ஆவது வயதில் அந்த கனவும் நிறைவேறி உள்ளது. (ஏ)

# நியூஸிலாந்தில் நேற்று மீண்டும் நில நடுக்கம்

### 2 பேர் பலி; ஊர்மனைக்குள் பாய்ந்தது ஆறு



வெலிங்டன், நவ.15

நியூஸிலாந்தில் கிறிஸ்டர் நகரத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தை அடுத்து நேற்று மீண்டும் பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் 6.3 என்று ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

நியூஸிலாந்தின் தெற்குப்பகுதியில் இடம்பெற்ற முதலாவது நிலநடுக்கம் கிறிஸ்ட்டர்சில் இருந்து சுமார் 95 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டது. ரிச்டர் அளவு கோலில் 7.8 ஆக பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து நில அதிர்வுகளும் ஏற்பட்டன. இதை அடுத்து சுனாமியும் தாக்கியுள்ளது. கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டு வருகின்றனர். இந்த நிலையில் வீதிகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கத்தின் எதிரொலியாக தெற்குத் தீவுப் பகுதியில் உள்ள கிளாரியன்ஸ் ஆற்று அணைக் கட்டின் தடுப்புச் சுவர் உடைந்து ஆற்றின் குறுக்கே விழுந்துள் ளது. இதனால், நீரோட்டம் தடை பட்ட ஆற்றுநீர், மால்பரோ மாவட் டத்தில் உள்ள சில பகுதிகளை நோக்கி பாயத்தொடங்கியுள்ளது. இதனால் தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் தங்களது வசிப்பிடங்களைவிட்டு வெளியேறுமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத்துக்குப் பின்னர் மேலும் நிலவ தீர்வுகள் தொடர்கின்றன. இதனால் பெரும்பாலான பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ)

## தற்கொலைத் தாக்குதல்; ஈராக்கில் 6 பேர் உயிரிழப்பு

பக்தாத், நவ.15

ஈராக்கின் வரலாற்றுப் பழமை வாய்ந்த கர்பலா நகரில் நேற்று மனிதகுண்டு தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

ஈராக்கின் பாலைவனப்பகுதியான கர்பலாவில் முஹம்மது நபியின் மகள்வழிப் பேரனாகிய இமாம் ஹுசைன் என்பவருக்கும் இஸ்லாமுக்கு எதிரான கொடுங்கோல் மன்னனின் படைகளுக்கும் இடையில் கி.பி. 680 ஆம் ஆண்டு நடைபெற்ற கர்பலா போரில் இமாம் ஹுசைன் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்தத் துக்கநாளை நினைவு கூரும் வகையில் உலகம் முழுவதும் வாழும் முஸ்லிம் களில் ஒருபகுதியினர் ஆண்டு தோறும் முஹரம் மாதத்தில் 40 நாள்கள் துக்கம் அனுஷ்டித்து, தங்களை வருத்திக் கொள்வது வழக்கமாக உள்ளது.

முஹரம் துக்கத்தின் 40 ஆவது நாள் நிறைவு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தநிலையில், கர்பலா போர் நடைபெற்ற அந்த நகரில் உள்ள ஐன் அல்–டம்ர் பகுதியில் நேற்று தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய மனித குண்டுத் தாக்குதலில் 6 பேர் பலியாகினர் என்றும், பலர் காயமடைந்தனர் என்றும் ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ)



ஹொங்கொங்கில் ஒரு பிரிவினர் சுதந்திரம் வழங்கக்கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் ஹொங்கொங்குக்கு சுதந்திரம் வழங்க எதிர்ப்புத் தெரிவித்து அங்கு வாழும் சீனமக்கள் நேற்று பேரணி நடத்தினர். அதில் 40, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பேரணியில் திரண்டனர். ஹொங்கொங் நாடாளுமன்றம் முன்பு கூடி சீனாவுக்கு ஆதரவாகவும், ஹொங்கொங் சுதந்திரத்துக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பினர்.

## 3 மில்லியன் சட்டவிரோதக் குடியேறிகளை ஆட்சிக்கு வந்தவுடன் வெளியேற்றுவேன்

### தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ட்ரம்ப் தெரிவிப்பு

வொஷிங்டன், நவ.15

அமெரிக்காவில் சட்ட விரோதமாக 3 மில்லியன் மக்கள் குடியேறியுள்ளனர். நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவேன் என்று அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஹிலாரி கிளிண் டனை, குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் தோற்கடித்தார். எதிர்வரும் ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப் பேற்கவுள்ள ட்ரம்ப் தேர்தல் வெற்றிக்கு பின்னர் முதல் முறையாக ஒரு பேட்டியை தனியார் தொலை காட்சி நடத்தும் '60 நிமிடங்கள்' என்னும் நிகழ்ச்சிக்கு அளித்துள்ளார்.

இதில் அவரிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. இதன்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அமெரிக்க ஜனாதிபதிக்கு வருடத்துக்கு 4 லட்ச டொலர்கள் சம்பளமாக வழங்கப்படுகிறது. அதைத்தான் நீங்களும் வாங்குவீர்களா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ட்ரம்ப், “இல்லை அவ்வளவு சம்பளம் நான் வாங்கப் போவதில்லை, ஆண்டுக்கு ஒரு டொலர் மட்டுமே சம்பளமாகப் பெற்றுக் கொள்வேன் என்றும் பணியில் இருக்கும் போது விடுமுறை எடுக்க மாட்டேன்” என்றும் அதிரடியாகப் பதிலளித்துள்ளார்.

மேலும், அமெரிக்காவில் சட்டவிரோதமாக 3 மில்லியன் மக்கள் குடியேறியுள்ளனர். நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவேன் என்றும் அவர் கூறியுள்ளார். (ஏ)

## ரோஹிங்யா இனத்தவர் 30 பேர் மியன்மாரில் பலி

யாங்கூன், நவ.15

மியன்மாரில் சிறுபான்மை இனத்தவராக வாழும் ரோஹிங்யா இனத்தவர்களுக்கும் ராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதலில் 30 பேர் பலியாகினர் என்று தெரியவந்துள்ளது.

மியன்மாரின் வடக்கே உள்ள ரக்கினே பகுதியில் ரோஹிங்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர்.

பத்து லட்சத்துக்கும் அதிகமான தொகையைக் கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர் 2012 ஆம் ஆண்டில் இருந்து ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் தொடக்கம் பாதுகாப்புப் படையினருடன் மிகக் கடுமையான மோதல்களில் ஈடுபட்டு வரும் அவர்களை ஒடுக்கும் வகையில் ரக்கினே பகுதியைச் சுற்றி வளைத்து ராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் கடந்த இரு நாள்களாக ராணுவத்தினருக்கும் ரோஹிங்யா இனப்போராளிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களில் 30 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ)

# வவுனியா விண்ணாங்கம்பிட்டி கிராமத்தில் மூங்கில் செய்கை



வவுனியா,நவ.15

வவுனியா வடக்கு பிரதேசத்தின் எல்லையோர கிராமமான விண்ணாங்கம்பிட்டியில் மூங்கில் பயிர்ச்செய்கை நடவடிக்கை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட விண்ணாங்கம் பிட்டி கிராமத்தில் இருந்த மக்கள் ஒதிமலைப் படுகொலையைத் தொடர்ந்து 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்திருந் தனர். இடம் பெயர்ந்த மக்கள் அருகில் பரவலடைந்து வந்த சிங்கள குடியேற்றங்கள் காரணமாக யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் அக்காணிகளில் தோட்டச் செய்கையில் கூட ஈடுபடவில்லை.

இந்த நிலையில் இடப்பெயர்வுகள் பலவற்றைச் சந்தித்த இப்பகுதி மக்கள் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010 ஆம் ஆண்டு பட்டிக்குடியிருப்பு வரை மீள்குடியேறிய போதும் அவர்களது விவசாய நிலங்களாகிய விண்ணாங்கம்பிட்டி எல்லையோரக் கிராமம் பற்றைக் காடுகளாக மாறியிருந்தன.

அதனை துப்பரவு செய்ய வசதியில்லாத நிலையில் அக்காணிகள் பராமரிப்பு இன்றி இருந்தன.

தற்போது இந்திய நிறுவனம் ஒன்றின் உதவியுடன் அப்பகுதி மக்களின் காணிகள் துப்பரவு செய்யப்பட்டு அப்பகுதியில் மூங்கில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கும் அந்நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

பிரதேச மக்களின் காணிகளில் மூங்கில்களை பயிரிட்டு அதனுடன் இணைந்த ஊடு பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு ஊக்கமளித்துள்ள குறித்த நிறுவனம் மூங்கிலை கொள்வனவு செய்து அதன் மூலம் மின்சார உற்பத்தியில் ஈடுபடவும் உத்தேசித்துள்ளது. அதனடிப்படையில் முதல்கட்டமாக அப் பகுதியில் 10 ஏக்கர் காணியில் மூங்கில் பயிர்ச்செய்கை நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், மூங்கில் பயிர்ச்செய்கைக்கான உதவிகளை வழங்கும் இந்திய நிறுவனத்தின் பிரதிநிதி ராம் சுப்பிரமணியம், அப்பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நிறுவனத்தின் உதவியுடன் மூங்கில் பயிர்ச் செய்கையில் ஈடுபட நடவடிக்கைகள் இடம்பெற்ற போதும் வடமாகாண விவசாய அமைச்சு அதற்கான அனுமதியை வழங்கியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-100)

# முல்லைத்தீவு தியோகு நகரில் மக்கள் குறைகேள் சந்திப்பு





முல்லைத்தீவு, நவ.15

முல்லைத்தீவு - தியோகு நகரில் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்பட்ட மக்கள் குறைகேள் சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

ஊரின் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஊர்ப் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் கலந்துகொண்டு தமது குறைகளைத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் உள்ள தியோகு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த மக்கள் குறைகேள் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் மக்கள் கலந்து கொண்டு தமது ஊரில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் பல்வேறு அடிப்படைக் குறைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

தியோகுநகர் ஊரின் கடற்கரையில் மீனவர்களின் தொழில் உடைமைகளின் பாதுகாப்புக்கு மின்விளக்குகள் வழங்குதல், கிராமத்தின் உள்வீதிகள் புனரமைத்தல், விளையாட்டுக் கழகத்திற்கான உதவி, பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கான சைக்கிள்கள் மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குதல் எனப் பல்வேறு குறைகளும் கோரிக்கைகளும் மக்களால் முன்வைக்கப்பட்டன. (ஐ-81)



வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களகத்தின் ஏற்பாட்டில் வவுனியா பாடசாலை மாணவர்களுக்கான சொற்சதுரங்கம் போட்டி நேற்று வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. கலாசார உத்தியோகத்தர் பண்டிதர். வீ.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற சொற் சதுரங்க நிகழ்வில் தமிழருவி த.சிவகுமாரன், தமிழ்மணி மேழிக்குமரன், மருத்துவர் செ.மதுரங்கன், மருத்துவர் சி.கிருபானந்தகுமாரன், செல்வி தமிழ்க்கவி, முதுகலைமாணி சி.கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். சொற்சதுரங்கம் தொடர்பான விளக்க உரைகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-100)

# முல்லைத்தீவு விநாயகபுரத்தில் பொலிஸாரால் இளைஞன் கைது!

முல்லைத்தீவு,நவ.15

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள விநாயகபுரம் பகுதியில் இளைஞன் ஒருவர் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த யோகராஜா விதுசன் (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்தமை தொடர்பான கடிதத்தைப் பயங்கரவாரத் தடுப்புப் பிரிவுப்பொலிஸார் அவரது குடும்பத்தினரிடம் கையளித்துள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட இளைஞன் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று பெற்றோர் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் கடை ஒன்றில் வேலை செய்து வந்துள்ளார். யாழ்ப் பாணத்தில் இயங்கிய ஆவா குழுவுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என்றும், அதனடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# செலுத்திச் சென்றபோது தீப்பற்றிய ஓட்டோ



வவுனியா, நவ.15

வவுனியா குளுமாட்டுச் சந்தியில் ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றியுள்ளது.குறித்த சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நெளுக்குளத்தில் இருந்து வவுனியா நகரம் நோக்கி பயணித்த ஓட்டோ எரிபொருள் ஒழுக்கு காரணமாக குளுமாட்டுச்சந்தியில் சென்றபோது திடீரெனத் தீப்பற்றியுள்ளது.

தீப்பற்றியதை அறியாத ஓட்டோச் சாரதி தொடர்ந்தும் ஓட்டோவைச் செலுத்திச் சென்றுள்ளார்.

தீப்பற்றியுள்ளதைக் கண்ட அப்பகுதி மக்கள் ஓட்டோ தீப்பற்றியுள்ளது என கூச்சலிட, சாரதி அதிலிருந்து பாய்ந்துள்ளார்.

இதன்பின், பொதுமக்களின் உதவியுடன் அருகே காணப்பட்ட குளத்தில் ஓட்டோ வைத்தள்ளி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனா. (ஐ)

# உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்: ஸ்பெய்ன், இத்தாலி அணிகள் வெற்றி





உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கான இருவேறு போட்டி களில் ஸ்பெய்ன் மற்றும் இத்தாலி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

ரஷ்யாவில் 2018ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உதைபந்தாட்ட உலகக்கிண் ணத்துக்கான தகுதிகாண் போட்டிகளில், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டிகளில், முன்னாள் உலக சம்பியன்களான ஸ்பெய்ன் மற்றும் இத்தாலி ஆகிய அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஸ்பெய்ன், மசிடோனியா ஆகிய அணிகளுக்கிடை யிலான போட்டியில், 4-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெய்ன் வெற்றி பெற்றது. ஸ்பெய்ன் சார்பாக, விட்டோலோ, நாச்சோ மொன்றீயல், அரிட்ஸ் அடுரிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்ததோடு, 'ஓன்' கோல் மூலம் மேலும் ஒரு கோல் பெறப்பட்டி ருந்தது.

இத்தாலி, லிட்டின்ஸ்டைன் ஆகிய அணிகளுக்கான போட்டியில், 4-0 என்ற கோல் கணக்கில் இத்தாலி வெற்றி பெற்றுள்ளது. இத்தாலியின் கோல்கள் அனைத்தும் இரண்டாவது பாதியிலேயே பெறப்பட்டிருந்த நிலையில், அன்ட்ரியா பெலொட்டி இரண்டு கோல்களையும் சிரோ இம்மொபைல், அந்தோ னியோ கன்ட்ரேவா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

வேல்ஸ், சேர்பியா அணிக ளுக்கிடையிலான மற்றுமொரு போட்டியில், 1-1 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலை யில் முடிவடைந்துள்ளது. வேல்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை, கரித் பேல் பெற்ற தோடு, சேர்பியா சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக் ஸான்டர் மிற்றோவிக் பெற்றார்.



இலங்கை - ஸிம்பாப்வே - மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய மூன்று அணிகள் மோதும் முத்தொடர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அறிமுக நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம்.

# நியூஸிலாந்தில் பயங்கர நிலநடுக்கம்: பயத்தில் உறைந்த பாகிஸ்தான் வீரர்கள்



கிறிஸ்ட்சர்ச், நவ.15

நியூஸிலாந்தில் உள்ள கிறிஸ்ட்சர்ச் நகரில் நேற்று முன்தினம் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் நீல்சன் நகரில் தங்கி இருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் போட்டியில் விளையாடுவ தற்காக நியூஸிலாந்து சென்றுள்ளது. இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் ஆரம்பமாக வுள்ளது.

இந்நிலையில், நியூஸி லாந்தில் உள்ள கிறிஸ்ட்சர்ச் நகரில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. 7.5 ரிச்டர் அளவில் இது பதிவாகியுள்ளது. இதனால் அந்த நகர் பாதிப்புக்குள்ளானது.

இந்த நிலநடுக்கத்தால் நீல்சன் நகரில் தங்கி இருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர். ஹோட்டலில் தங்கி இருந்த பாகிஸ்தான் வீரர்கள் நிலநடுக் கத்தை உணர்ந்தனர். 7 ஆவது மாடியில் தங்கி இருந்த பாகிஸ்தான் வீரர்கள் ஹோட்டலில் இருந்து உடன டியாக வெளியேற்றப்பட்டனர்.

வீரர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதேபோல அங்கு விளையாடி வரும் பாகிஸ்தான் பெண்கள் கிரிக் கெட் அணியும் பாதுகாப்பாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதற்கிடையே நிலநடுக்கம் காரணமாக கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டி பாதிக்கப்படாது என்றும் திட்டமிட்டபடி நடைபெறும் என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கபடிச் சுற்றுப் போட்டி

## பருத்தித்துறை சென்.அன்ரனிஸ், பலாலி விண்மீன் வெற்றி









பருத்தித்துறை, நவ.15

வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்திச்சங்கம் - சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக்கழகம் மின்னொளி யில் நடத்தும் கபடிச் சுற்றுப் போட்டி கழக மைதான த்தில் இடம்பெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் பருத் தித்துறை சென். அன்ரனிஸ் 'ஏ' அணியை எதிர்த்து சுப்பர் மடம் சித்தி விநாயகர் 'ஏ' அணி விளையாடியது.

தொடக்கம் முதல் ஆட்டம் விறுவிறுப்பாக சென்றது. முதல் பாதி ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் முன்னிலை வகித்தது. பின்பாதி ஆட்டத்தில் சித்தி விநாயகர் அணி வீறு கொண்டு எழுந்து விளையாடியது.

ஆட்டநேர முடிவில் 65:41 என்ற புள்ளிகள் அடிப்படை யில் பருத்தித்துறை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகஅணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயக னாக பருத்தித்துறை சென். அன்ரனிஸ் அணிவீரர் கண்ணா தெரிவு செய்யப்பட் டார். இவருக்கான பதக்கத்தை ஐக்கிய விளையாட்டுக் கழக மூத்த அங்கத்தவர் ரங்க நாதன் வழங்கி கௌர வித்தார்.


இரவு 8 மணிக்கு ஆரம்ப மான இரண்டாவது போட்டியில் பலாலி விண்மீன் 'பி' அணியை எதிர்த்து சாவ கச்சேரி இந்து விளையாட்டுக் கழக அணி விளையாடியது. ஆட்டம் தொடக்கம் முதல் பலாலி விண்மீன் முன்னிலை வகித்தது. ஆட்டநேர முடிவில் 64:31 என்ற புள்ளியின் அடிப்படையில் பலாலி விண்மீன் கபடி அணி வெற்றி பெற்றது.

தொடரின் இரண்டாவது நிலையில் பலாலி விண்மீன் அணி காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. போட்டியின் ஆட்ட நாய கனாக பருத்தித்துறை பலாலி அணிவீரர் அல்பிரட் ரூபதாஸ் தெரிவுசெய்யப்பட்டார். இவருக்கான பதக்கத்தை ஐக்கிய விளையாட்டுக்கழக மூத்த அங்கத்தவர் புவனேந் திரம் வழங்கினார்.

ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளி கபடிச் சுற்றுப் போட்டியின் லீக் ஆட்டங்கள் இவ்வாரத்துடன் நிறைவு பெறுகின்றன. அடுத்த வாரம் அரையிறுதிப் போட் டிகள் இடம்பெறவுள்ளன.

# போட்டியை சமநிலை செய்வது எப்படி என்றும் எங்களுக்குத் தெரியும்

## விராட் கோஹ்லி கூறுகிறார்




ராஜ்கோட், நவ.15

போட்டியை சமநிலை செய்வது எப்படி என்றும் எங்களுக்குத் தெரியும் என இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

ராஜ்கோட்டில் நடைபெற்ற இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. இந்திய அணித் தலைவர் கோஹ்லி நிலைத்து நின்று விளையாடி 49 ஓட்டங்களை எடுத்து அணியின் சமநிலைக்கு உதவினார்.

விராட் கோஹ்லி டெஸ்ட் அணியின் தலைவராக பதவி ஏற்றபோது, நான் எந்தவொரு சூழ்நிலையிலும் சமநிலைக்காக விளையாடமாட்டேன். வெற்றியைக் குறிவைத்துத் தான் செல்வோம். முடியாத பட்சத் தில்தான் சமநிலை பற்றி சிந்திப்போம் என்று தெரிவித்திருந்தார்.

அதேபோல்தான் இலங்கை தொடரில் இருந்து இந்தியாவிற்கு முடிவுகள் வந்துள்ளன. தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை இந்தியா 3-0 எனக் கைப்பற்றியது. ஒரு போட்டி சமநிலையில் முடிந்தது. பெங்களூரில் நான்கு நாட்கள் மழை பெய்ததால் அந்தப் போட்டி சமநிலையில் முடிந்தது. அதேபோல் மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடரில் இரண்டு போட்டிகள் சமநிலையில் முடிந்தது. இந்த இரண்டு போட்டிகளிலும் மழை குறுக்கிட்டது.

இதனால் இந்திய ஆட்டம் எந்தவொரு சூழ்நிலையிலும் சமநிலையை நோக்கி நகர்ந்தது கிடையாது. முதன்முறையாக இந்தியா சமநிலைக்காக தற்போது விளையாடியுள்ளது.

இதனால் எங்களுக்கு போட்டியை சமநிலை செய்வது எப்படி என்பதும் தெரியும் என்று விராட் கோஹ்லி கூறியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான போட்டிக்குப் பின்னர் சமநிலை குறித்து விராட் கோஹ்லி கூறுகையில்,

"இந்தப் போட்டியின் மூலம் ஆட்டத்தை சமநிலை செய்வது எப்படி என்பதும் எங்களுக்கு தெரிந்துள்ளது சிறந்த விடயம். நாங்கள் போட்டியில் வெற்றி பெற்றுள்ளோம் அல்லது தோல்வியடைந்து உள்ளோம். ஆகவே, இந்திய அணி எப்படி ஒரு போட்டியை சமநிலை செய்து கொள்ளும் என்பது பற்றி ரசிகர்களுக்கு பெரிய சந்தேகம் இருந்திருக்கும்.

ரவீந்திர ஜடேஜா களம் இறங்கும்போது அவரிடம் சென்று, இந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இன்னொரு விடயத்தை பற்றி தெரிந்து கொண்டு, அதில் முன்னேற்றம் காண நம்மிருவருக்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பு என்று கூறினேன்.

ஒருவேளை வருங்கால டெஸ்ட் கிரிக்கெட்டில் இது போன்ற சூழ்நிலை ஏற்படலாம். அப்போது நமது நோக்கம் என்ன, எவ்வாறு செயற்பட வேண்டும், இருவரும் எப்படி ஓட்டங்களைச் சேர்க்க வேண்டும் என்பதை தானாகவே செயற்படுத்த வேண்டும்.

ஒன்றிரண்டு ஓட்டங்கள் எங்கே அடிக்கலாம், பவுண்டரிகள் எங்கே அடிக்கலாம் என்பதை தெரிந்து கொண்டு சராசரியாக கிரிக்கெட்டை ஆட வேண்டும். அதே சமயத்தில் பாதுகாப்பான ஆட்டத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அன்றைய ஆட்டம் சவாலான சூழ்நிலை. ஆனாலும் நாம் திறமையாக அதை சமாளித்தோம்" என்றும் தெரிவித்துள்ளார்.

# மகளிர் கிரிக்கெட் தொடரை இந்திய அணி வென்றது



விஜயவாடா, நவ.15

மகளிர் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி கண்டுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ள இந்திய அணி, தொடரையும் கைப்பற்றியது.

விஜயவாடாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக டாட்டின் 63 ஓட்டங்களை எடுத்தார். இந்தியத் தரப்பில் கோஸ்வாமி, பிஸ்த் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் ஆட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி, 38 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்களை எடுத்து வெற்றி கண்டது. இந்திய அணியில் தலைவி மிதாலி ராஜ் 45, ஸ்மிருதி 44 ஓட்டங்களை எடுத்தனர்.

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்:

# டி கொக் சதத்தால் தென்னாபிரிக்கா 326 ஓட்டங்களைக் குவித்தது



ஹேமில்டன், நவ.15

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் குயிண்டன் டிகொக் அதிரடியாக விளையாடியதன் மூலம் தென்னாபிரிக்கா 326 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

ஆஸ்திரேலியா-தென்னாபிரிக்க அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹேமில்டனில் நடைபெற்று வருகிறது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 85 ஓட்டங்களில் சுருண்டது. பின்னர் முதல் இன்னிங்ஸை விளையாடிய தென்னாபிரிக்கா முதல் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 171 ஓட்டங்களை எடுத்து இருந்தது. குயின்டன் டிகொக் 28 ஓட்டங்களுடனும், பவுமா 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று முன்தினம் 2 ஆவது நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

நேற்றைய 3 ஆவது நாள் ஆட்டம் இடம்பெற்றது. தென்னாபிரிக்கா தொடர்ந்து விளையாடியது. குயின்டன் டிகொக் அதிரடியாக விளையாடி சதம் அடித்தார். 139 பந்துகளில் 16 பவுண்டரியுடன் 100 ஓட்டங்களைத் தொட்டார். 12 ஆவது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 2 ஆவது சதமாகும்.

தென்னாபிரிக்கா அணி 100.5 ஓவர்களில் 326 ஓட்டங்களைக் குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. ஆஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கையை விட இது 241 எண்ணிக்கை கூடுதலாகும்.

குயின்டன் டிகொக் 104 ஓட்டங்களும், பவுமா 74 ஓட்டங்களையும் எடுத்தனர். ஹாசல்வுட் 6 விக்கெட் வீழ்த்தினார். ஸ்டார்க்கு 3 விக்கெட் கிடைத்தது.

241 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் ஆஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்ஸை விளையாடியது. அந்த அணியின் தொடக்க வீரர் பான்ஸ் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் அபோட் பந்தில் ஆட்டமிழந்தார். 2 ஆவது விக்கெட்டுக்கு வொர்னருடன் உஸ்மான் டுவாவி ஜோடி சேர்ந்து விளையாடினர்.



# ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப்: முதல் ஆட்டத்தில் ஜோகோவிச் வெற்றி

லண்டன், நவ.15

லண்டனில் இடம்பெற்ற ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் ஜோகோவிச் போராடி வெற்றி பெற்றுள்ளார்.

தரவரிசையில் முன்னிலையில் உள்ள வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் ஏ.டி.பி. உலக சுற்றுலா இறுதி சுற்று என்று அழைக் கப்படும் ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி லண்ட னில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதில் ஒரு பிரிவில் முதற்தரவீரர் அன்டி முர்ரே (இங்கிலாந்து), வொவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து), நிஷிகோரி (ஜப்பான்), மரின் சிலிச் (குரோஷியா) ஆகியோரும், மற்றொரு பிரிவில் நடப்பு சம்பியன் ஜோகோவிச் (செர்பியா), மிலோஸ் ராவ்னிக் (கனடா), மான்பில்ஸ் (பிரான்ஸ்), டொமினிக் திம் (ஆஸ்திரியா) ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு வீரரும் தங்கள் பிரிவில் உள்ள மற்றவர்களுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். ரவுன்ட் ரொபின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் வீரர்கள் அரைஇறுதிக்குள் அடியெடுத்து வைப்பார்கள்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆரம்ப ஆட்டத்தில் 2 ஆம் நிலை வீரர் ஜோகோவிச், டொமினிக் திம்மை எதிர்கொண்டார். விறுவிறுப்பான இந்த மோதலில் ஜோகோவிச் 6-7, 6-0, 6-2 என்ற செட் கணக்கில் போராடி வெற்றி பெற்றுள்ளார்.

# அரசியல் கைதி சதீஸின் இரு நூல்கள் வெளியீடு

தமிழ் அரசியல் கைதியான கிளிநொச்சி விவேகானந்தனூர் சதீஸின் இருநூல்களின் வெளியீடுகள் நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்றது.

'விடியலைத் தேடும் இரவுகள்', இரும்புக் கதவுகளுக்குள் இருந்து' நூல் வெளியீடும் நூலின் அறிமுகமுமே நேற்று இடம்பெற்றன. கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண போக்குவரத்து, மீன்பிடித்துறை அமைச்சர் டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, அரியரத்தினம், சயந்தன், சுகிர்தன், அஸ்மின், கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர், மன்னார் மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவகரன் ஆகி

பக்கம் 20 »



# தீர்வு எத்தகையது என்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு:-

சட்டத்தை விமர்சிக்கக்கூடாது என்று இங்கு பேசப்பட்டது. அப்படியல்ல - நன்றாக விமர்சிக்கலாம். நாங்கள் பயங்கரவாத தடைச்சட்டம் கொடுமையானது என்று தொடர்ச்சியாக விமர்சிக்கின்றோம். நீதிமன்றத் தீர்ப்புக்களையும் விமர்சிக்கலாம். நீதிமன்றத் தீர்ப்பு தவறானது என்பதை எவரும் விமர்சிக்கலாம். ஆனால் ஒரு வழக்கில் தீர்ப்பு கொடுக்கப்படுவதற்கு முன்னர், வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அந்த வழக்கை பற்றி விமர்சிக்கக்கூடாது அது தண்டனைக்குரிய குற்றம்.

சென்ற வருட தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பகிரங்கமாக ஒரு விடயத்தைச் சொன்னார். 2016 வருட இறுதிக்குள்ளே தமிழ் மக்களுக்கு தீர்வு ஒன்று வரும் என்றார். எங்களுடைய தேர்தல் அறிக்கையை முன் வைக்கின்ற போது "இதுதான் தமிழ் மக்கள் மத்தியில் நடத்துகின்ற சர்வஜன வாக்கெடுப்பு, தீர்வுத் திட்டம், இதற்கு நீங்கள் வாக்களித்தால் இதற்காக நாங்கள் கதைப்போம், இந்த அடிப்படையில் அடுத்த வருடத்துக்குள் (2016) ஒருதீர்வை நாங்கள் எடுப்போம்" - என்று சொன் னார்.

இந்த வருட ஆரம்பத்தில் எங்களுடைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலே சில எம்.பிக்கள் ஐயாவிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 2016 இற்குள்ளே தீர்வு வரும் என்று நீங்கள் உறுதிமொழி கொடுத்துள்ளீர்கள், எனவே இந்த வருடத்துக்குள் தீர்வு வரவில்லை என்றால் நாங்கள் எல்லோரும் இராஜினாமச் செய்வதா? என்று கேட்டார்கள்.

அவர் சொன்ன பதில் "இப்பொழுது சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இப்பொழுது ஒரு சந்தர்ப்பத்தை நாங்கள் ஏற்படுத்தியிருகின்றோம். கொடுங்கோல் ஆட்சியை அகற்றி இந்த நாட்டில் எப்பொழுதுமே எதிரும் புதிருமாக இருந்த இரண்டு கட்சிகளை ஒன்றாக இணைத்து ஓர் ஆட்சியை ஏற்படுத்தியிருகின்றோம். எனவே இது ஒரு சந்தர்ப்பம். எவரும் அதனை மறுக்க முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்து எமது மக்களுக்கு ஒரு தீர்வு வரவேண்டுமானால் இந்த வருடம் வரவேண்டும். இந்த வருடத்திலேயே தீர்வு வராது விட்டால் இந்தச் சந்தர்ப்பத்திலேயே வருகின்ற தீர்வு வராது. அதற்கு பிறகு நாங்கள் எத்தனை தசாப்பதங்கள் இருக்க வேண்டுமோ என்பது எங்களுக்குத் தெரியாது. ஆகவே இந்தவருடத்திதுக்குள்ளேயே ஒரு தீர்வைகொண்டுவரவேண்டியது எங்களுடையமக்களின்சார்பிலே அத்தியாவசியமானது. அதுநடக்க வேண் டும், அதுநடக்கவேண்டும் என்று சொன்னால் அது நடக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் செயற்பட்டால் தான் அதனை நடப்பிக்க முடியும் - என்றார் சம்பந்தன் ஐயா. இதனைநாம்அனைவரும் ஏற்றுக்கொண்டோம்.

அரசமைப்புப்பேரவையிலேயே அமர்ந்திருந்து, வழிகாட்டல் குழுவிலே அமர்ந்திருந்து , மற்றத் தலைவர்களை எப்படியாக எங்களுடைய நியாயத்தை அவர்கள் ஏற்கச் செய்வதற்கு முன்னதாக, அது நடக்கும் என்ற வாதத்தில் எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது, அந்த நம்பிக்கையை நாங்கள் வெளிக்காட்டி நிற்கின்றோம்.

நான் இதனைச்சொல்வதற்கு இன்னொருகாரணம் இருக்கிறது. இன்றைய தினம் வெளிவந்த பத்திரிகை ஒன்றில் ஒரு பத்திரிகையாளர் எழுதியிரு கின்றார் -தொலைக்காட்சிஒன்றில்யாரோ ஒருவர் சொன்னதாக. 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஜனாதிபதியையும் சேர்த்தால் 226. பேர் இந்த 226 பேரிலேயே தீர்வு வரும், புதிய அரசமைப்பு உருவாகும் எனச் சொல்கின்ற ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்தான் என்று. அப்படியான நம்பிக்கை எனும் மிகப்பெரும் மகுடம் ஒன்றை சூட்டியதற்காக நன்றி கூறநான்கடமைப்பட்டிருக்கிறேன். நம்பிக்கையோடு நாங்கள் வேலை செய்வோம், நம்பிக்கை இல்லை என்று சொன்னால் நாங்கள் அதில் ஈடுபட முடியாது.

எங்களைத் தெரிவு செய்த மக்கள் எங்களுக்குக் கட்டளையிட்டு, ஆணையிட்டு, அங்கே அனுப்பியிருக்கின்றார்கள் அதனைச் செய்யுமாறு. வேறு எதற்காக வும் அல்ல. இது நடக்காது, இது நடக்கப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதற் காக மக்கள் எங்களை அங்கே அனுப்பவில்லை. அதை நடத்திக் காட்டுவதற்காக அனுப்பியிருக்கின்றார்கள்.

அதைச் செய்கிற போது காலச் சூழ்நிலைகள் அத்தியாவசியம். எப்போது எதைப்பேசுவது, எதைச் செய்வது, எப்படி அரசாங்கத்தோடு இணங்கி நடப்பது, எப்போது அரசாங்கத்தை எதிர்த்துப் பேசுவது என்பதெல்லாம் அத்தியாவசியப் பணிகள்.

சில நாள்களுக்கு முன்னதாக மட்டக்களப்பிலே மங்களராம விகாரையின் விகாராதிபதி கெட்ட வார்த்தைகளாலேயே தமிழ் அரச உத்தியோகத்தரை திட்டித் தீர்த்து, ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரைத் துரத்தி அடித்து செயற்பட்டுள்ளார் என்பதை நாங்கள் காணொளிகள் மூலம் கண்டிருக்கின்றோம். இது பகிரங்கமான கண்டிக்கப்பட வேண்டியது. கண்டிக்கின்றோம். அவருக்கெதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இன ஒற்றுமை, நல்லிணக்கம் என்பதிலேயே அரசாங்கம் உண்மையாக, தொடர்ச்சியாக செயற்பட வேண்டும் என்றால் இப்படியான சம்பவங்களை அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டு வர வேண்டும். சட்டம் அனைவருக்கும்சமமாகஇருக்கவேண்டும். அதனை அரசாங்கம் செய்தாக வேண்டும் என்பதை பகிரங்கமாக இந்த வேளையில் நான் கேட்கிறேன்.

அரசமைப்புப் பேரவையின் வழிகாட்டல் குழுவிலேயே அமர்ந்திருக்கின்ற போது பௌத்ததிற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று யாராவது பேசினால்இந்தக் காணொளியை நான் காட்டுவேன். இதற்காக முதலிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி நான் கேட்பேன். எனவே, நாங்கள் பேச வேண்டிய இடங்களில் சரியானதைப் பேசுவோம். ஒத்துழைக்க வேண்டிய இடங்களிலே சேர்ந்து ஒத்துழைப்போம்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வந்தவுடன் பலருக்கு நடுக்கம். இனி அமெரிக்க ஆதரவுஎமக்குக்கிடைக்காதே என்று. சென்ற வருடம் இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணங்கி அந்தத் தீர்மானத்தை தாங்களே முன்மொழியச் செய்தது எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரும் வெற்றி. ட்ரம்ப் போன்றவர்கள் ஜனாதிபதியாக வந்துவிடுவார்கள் என்று நாங்கள் அதனைச் செய்யவில்லை.

நாங்கள் செய்ததன் கார ணம், மனித உரிமைகள் பேரவையிலேயே அமெரிக்கத் தரப் புக்கு ஒருவருடகாலத்துக்குஉறுப்புரிமை இல்லாது போகி றது, உலகத்திலேயேவெவ்வேறுபிரச்சினைகள் நடந்துகொண்டிருக்கின்றன, எனவே, எங்களு டைய முக்கியத்துவம் குறைந்து விடும், ஆகவே, அது குறைவதற்கு முன்னதாக இலங்கை அரசாங்கத்தை நாங்கள் இந்தப் பிடிக்குள்ளே இறுக்க வேண்டும், அவர்கள் இணங்கி ஒரு தீர்மானத்தை கொண்டுவர வேண்டும் என்பதற்காக பேச்சு நடத்தி சில விடயங்களில் விட்டுக் கொடுத்துத்தான் அவர்களை இணங்கச் செய்தோம். ஆனால் இப்பொழுது அது எவ்வளவு பெரிய முக்கியத்துவமான விடயம் என்று எங்களுக்குத் தெரியும்.

அமெரிக்காவின் அழுத்தம் முழுமையாக இல்லாது விட்டாலும் 47 நாடுகள் உறுப்புரிமை கொண்டிருக்கின்ற ஒரு சர்வதேச அரங்கிலே தாங்கள் இதனைச் செய்கின்றோம் என்று இலங்கை அரசாங்கம் தானாகவே கொடுத்திருக்கின்ற வாக்குறுதி. செய்யாமல் தப்ப முடியாது. ஆகவே, சென்ற வருடம் அவர்களையும் இணங்கச் செய்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது சரியாக கணிப்பெடுத்து செய்த நடவடிக்கை என்பதை நாங் கள் இந்த வேளையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

இந்தச் சூழல் மாறும். இன்றைக்கு இருக்கின்ற சூழலிலே நாங்கள் அரசாங்கத்தோடு பேச்சு நடத்துகிறோம். ஆனால் அழுதத்தையும் பிரயோகிக்கின்றோம். நாங்கள் இறங்காமல் இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பிலே தீர்வு வந்தது என்று எவரும் சொல்ல முடியாது. நாங்கள் எங்களுடைய மக்கள் எங்களுக்குக் கொடுத்த ஆணைப்படிதான் நடப்போமே தவிர, வேறு எந்த அடிப்படையிலும் நாங்கள் நடக்க முடியாது.

ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற சந்தர்ப்பம் 2016 இல் தீர்வு என்று ஐயா சொன்னது. சில மாதங்களுக்கு முன்னர் சிலர் சில நடவடிக்கைகளை எடுத்த போது கொஞ்சம் பொறுத் திருங் கள் என்றுசொன்னோம். அப்போதும் சொன்னோம்.இரண்டுமாதங்களில் ஓர் இடைக்கால அறிக்கை வருகிறது, அதுவரை பொறுத்திருங்கள் என்றும் சொன் னோம்.

இடைக்கால அறிக்கை வருகின்ற 19ஆம் திகதி காலை ஒன்பதுமுப்பது மணிக்கு அரசமைப்பு பேரவையிலே சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது முதலாவது இடைக்கால அறிக்கை. இரண்டாவது இடைக்கால அறிக்கை முழுமையான இடைக்கால அறிக்கை– அதிகாப்ர பகிர்வு சம்பந்தமாக, நாட்டின் ஆட்சிமுறை சம்பந்தமாக என எல்லாவற்றையும் உள்ளடக்கிய இரண்டாவது இடைக்கால அறிக்கை - டிசெம்பர் மாதம் பத்தாம் திகதி முன்னதாக அரசமைப்பு பேரவையிலே சமர்ப்பிக்கப்படும்.

அது சமர்ப்பிக்கப்படுகின்ற போது எப்படியான தீர்வு முன்வைக்கப்படுகிறது என்று அனைவருக்கும் பகிரங்கமாக முன்வைக்கப்படும். எனவே 2016 இற்குள்ளே அந்தத் தீர்வுத் திட்டம் எப்படியானது என்பது பகிரங்கமாகவே அனைவருக்கும் தெரியவரும்.

ஆகையினாலே, இதுவரை பொறுமைகாத்த எங்களுடைய மக்களுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். கொஞ்சம் பொறுமையாக இருங்கள் சில சில விடயங்களைப் பேச்சு நடக்கின்றபோது வெளிப்படுத்த முடியாது. ஏனென்றால் பேச்சு மேசையில் அசௌ கரியம் ஏற்பட்டுவிடும். பிறகுஇணக்கப்பாடு என்பது கடினம். இதனை மக்களிடம் சொல்லியிருந்தோம் – மக்கள் அதனைச் சரியாகசெவிமடுத்திருந்தார்கள்.

எனவே, திகதிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன அதன்போது தீர்வு பற்றிய விவரங்கள் வெளிப்படுத்தப்படும். அப்போது அது தொடர்பில் பகிரங்க விவாதங்கள், விமர்சனங்கள் எல்லாத் தரப்புக்கள் மத்தியிலும் ஏற்ப டும். மிகவும் முக்கியமாக தென் பகுதியில் நாட்டை பிரிப்பதற்கான புதிய அரசமைப்பை உருவாக்கிவிட்டார்கள் என்று பெரும் எதிர்ப்புகள் ஏற்படும். எங்களுடைய பக்கத்தில் இருந்தும் எதிர்ப்பு ஏற் படும் – இது தனிநாடு இல்லை, இதில் அது இல்லை, இது இல்லை என்று.

ஒட்டுமொத்தமாக எங்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற, தனித்துவத்தைப் பேணுகின்ற அதேவேளை, மற்ற மக்களுடன் சேர்ந்து இந்தத் தீவிலேயே நாங்கள் சுமூகமாக வாழுகின்றதான, அனைவருக்கும் மதிப்பளித்து வாழ்கின்றதான ஓர் ஏற்பாடு அந்தப் புதிய அரசமைப்பில் ஏற்பாட்டிலே இருக்குமாக இருந்தால் அது எங்களுடைய முன்னேற்றதுக்கு ஓர் அத்திபாரமாக இருக்கும்.

எப்படியான ஆட்சி முறையாக இருந்தாலும், இந்த நாட்டில் வாழ்கின்ற எல்லா இன மக்களுடனும் நாங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். அது ஒரு நாடாக இருந்தால் என்ன, ஆட்சி முறையிலேயே நாங்கள் ஒற்றுமையாக சேர்ந்து சகோதரத்துவமாக வாழப் பழகவேண்டும். சண்டை பிடிக்காமல் எங்களுடைய விவகாரங்களை நாங்கள் பேசித் தீர்க்கப் பழக வேண்டும். பேசித் தீர்க்கப் பழகுவது சிலவேளைகளில்கடினமான செயல். ஆனால் அதை விட்டால்வேறுவழியில்லை.

திரும்பவும் நாங்கள் அதல பாதாளத்துக்குள் செல்லாமல் மீண்டெழுந்து எங்களுடைய நிலத்தில் உரித்தோடு வாழ வேண்டும். ஆனால், இந்தத் தீவும் ஏனைய மக்களோடு பகிர்ந்துகொண்டிருக்க நாடு என்ற அடிப்படையிலே வாழாவிட்டால் நாங்கள் அழிவதைத் தவிர வேறு வழியிருக்காது. ஆகவே நிதானமாகச் சிந்தித்து வாக்களிக்கின்ற மக்கள், நிதானமாகச் சிந்தித்து ஆணைகொடுக்கிற மக்கள், இப்படியான தீர்வுகள் வருகின்றபோது அதனைச் சரியாகப் பகுத்தாராய்ந்து எங்களுக்குச் சரியான சமிஞ்கைகளைக் கொடுப்பார்கள் என்று நம்புகின்றோம். எனவே, அந்த விடியலோடு சதீஸ்குமார் எதிர்பார்க்கின்ற விடியலும் ஏற்படும்– எனத் தெரிவித்தார். (70)

# புதையல் எடுப்பதற்காகத் தன் இரு பிள்ளைகளையும் பலி கொடுக்க முயன்றதாலேயே உருவான விபரீதமாம்!

## கன்னியாவில் மனைவியையும், மகள்மாரையும் கொன்ற கொடூரத்தின் பின்னணி



'கன்னியா காட்டுப் பகுதியில் உள்ள சிறு மலை ஒன்றில் புதையல் தோண்டுவதற்காக எனது பிள்ளைகளைப் பலி கொடுக்க முயன்றேன். அதற்கு மனைவி சம்மதிக்கவில்லை. இதனால் அவருக்கும் எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதற்குப் பின்னர் நடந்த எதுவுமே எனக்குத் தெரியாது'

- இவ்வாறு, நேற்று முன்தினம் திருகோணமலை கன்னியாவில் மனைவியையும் பிள்ளைகளையும் வெட்டிக்கொலை செய்த கணவனான ராஜலக்ஷ்மன் தெரிவித்துள்ளார். மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மயக்கம் தெளிந்தபின்னர்பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

திருகோணமலை-கன்னியா - கிள்குஞ்சுமலைப்பகுதியில் 04 ஆவது ஒழுங்கையில் வாழ்ந்த மேற்படி ராஜலக்ஸ்மன் - நித்தியா, அவர்களின் இரு பிள்ளைகளான காயத்திரி (வயது-10), சந்தியா (வயது-08) ஆகியோரை உள்ளடக்கிய குடும்பம் வறுமையானதாக இருந்தாலும் மிகவும் மகிழ்வான வாழ்க்கையை வாழ்ந்தது.

இரண்டு பிள்ளைகளுடனும் ராஜலக்ஷ்மன் மிகவும் அன்பாக இருந்தார். காலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வது, பாடசாலை முடிவடைந்த பின்னர் வீட்டுக்குக் கூட்டிவருவது போன்ற செயற்பாடுகளை அவரே மேற்கொண்டார் என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், தனது கணவன் புதையல் பைத்தியத்தில் திரிகின்றார் என்று அவரது மனைவியான சந்தியா கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் தனது தமக்கையிடம் தெரிவித்திருந்தார். இதனால் பிள்ளைகளுக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என்று தனது அச்சத்தையும் அவர் வெளியிட்டிருந்தார். இந்த விடயத்தை தமக்கை பொலிஸ் விசாரணையில் தெரிவித்திருக்கின்றார்.

கொலையாளியான ராஜலஷ்மன் மேசன் வேலை செய்பவர் என்றும் கடந்த 07 மாதங்களாக எவ்வித தொழில்களுக்கும் செல்லாமல் வீட்டில் அதிகளவில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு வந்ததாகவும் அவரது வீட்டுக்கு அருகிலுள்ள அவரது நண்பரான கே.கஜேந்திரன் தெரிவித்தார்.

ராஜலக்ஷ்மனின் வீட்டுக்கு சமீபமாக, கல் மலையொன்று உள்ளது. அதில் முகம் வடிவிலான உருவமொன்று காணப்படுகின்றது. ராஜலக்ஷ்மன் அந்த உருவத்தை நாள்தோறும் பார்த்து வழிபடுவார். அவர் அதீத மூட நம்பிக்கையுடன் இருந்தார் எனவும் மந்திரம் - சூனியம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டவர் என்றும் மேற்படி நண்பர் தெரிவித்தார். மேலும், அவரது வீட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கோயிலுக்குத் தினமும் பூசைகள் செய்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த மாதம் செல்வநாயகபுரம் - புளியங்குளம் பகுதியிலுள்ள வராகியம்மன் கோயிலில் பூசை நடந்த போது ஆடைகள் கலைந்தவாறு காணப்பட்டார் என்றும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொலை நடந்த சம்பவ தினத்தன்று குறித்த நபர் தனது பிள்ளைகளை தமது வீட்டில் வைத்து மஞ்சள் தண்ணீரினால் நீராட்டிவிட்டு மனைவியின் தமக்கை வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கின்றார். (இவரது வீட்டில் இரு பாத்திரங்களில் எஞ்சிய மஞ்சள் தண்ணீர் காணப்பட்டது)

இவர்கள் அங்கு சென்றபோது தமக்கை கடைக்குச் சென்றிருந்தார் என்றும் அவரின் தாயார் ஆடு மேய்ப்பதற்குச் சென்றிருந்தார் என்றும் தெரியவருகின்றது. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட கொலையாளியான ராஜலக்ஷ்மன், மனைவி, பிள்ளைகளை அறையொன்றுக்குள் கொண்டுசென்று கதவைத் தாளிட்டார்.

அறைக் கதவு மூடும் சத்தம் பலமாகக் கேட்டது என்றும் அதன் பின்னர் சற்று நேரம் அலறல் சத்தம் கேட்டது என்றும் பிரதேச மக்கள் கூறுகின்றனர். இந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் அந்த வீட்டில் ஏதோ நடக்கின்றது என்று தாங்கள் அங்கு ஓடிச் சென்றனர் எனவும் ஆனால், கதவு மூடப்பட்டிருந்ததால் உள்ளே செல்ல முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் சில இளைஞர்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு மேலாக ஏறி ஓடுகளைக் கழற்றி உள்ளே பார்த்தனர். இதன்போது அறை முழுவதும் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. மனைவி பிள்ளைகள் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். ஆனால், கணவரான இராஜலக்ஷ்மன் அப்போதும் வாளுடன் நிர்வாணக் கோலத்தில் அறையில் நின்றார்.

உள்ளே வந்தால் வெட்டுவேன் என்று அவர் எச்சரித்ததால் யாரும் உள்ளே செல்ல முடியவில்லை. இதனிடையே மேலும் சில ஓடுகளைக் கழற்றியபோது ஒரு ஓடு எதேச்சையாக கொலையாளிக்கு மேலே விழுந்ததாகவும் இதனால் அவர் மயங்கி வீழ்ந்தார் எனவும் வீட்டுக்கு மேலே ஏறியவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் உள்ளே சென்று அறைக் கதவுகளைத் திறந்த பொலிஸார் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்த போது அவர்கள் உயிரிழந்திருந்தனர். ஆனால், அறையின் சுவர் முழுவதும் இரத்தம் தெறித்திருந்தது. அத்தோடு அறையின் நான்கு மூலைகளிலும் இரத்தம் ஊற்றப்பட்டிருந்ததாக அங்கு சென்று பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

கொலையாளி மயக்கமடைந்திருந்ததால் அவரை வைத்தியசாலையில் சேர்த்த பொலிஸார் நேற்று அவரிடம் வாக்குமூலம் பெற்றனர்.

மலையில் புதையல் இருப்பதாகவும் அதை எடுக்கும் நோக்கத்திலேயே இந்தக் கொலைகளைத்தான் செய்தார் எனவும் அவர் தெரிவித்தாராம்.

'புதையல் தோண்டுவதற்காக எனது பிள்ளைகளைப் பலி கொடுக்க முயன்றேன். அதற்கு மனைவி சம்மதிக்கவில்லை. இதனால் அவருக்கும் எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதற்குப் பின்னர் நடந்த எதுவுமே எனக்குத் தெரியாது' - என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

அவர், நேற்று திருகோணமலை மேலதிக நீதிவான் விஷ்வந்த பெர்ணான்டோ முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இம்மாதம் 28 ஆம் திகதி வரை ஆன விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## நெல்லியடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாநந்தம் (வயது-67) என்பவரே மரணமடைந்தவராவார்.

மேற்படி குடும்பஸ்தரும் அவரது மனைவியும் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில், சிகிச்சையொன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

அச்சமயம் இவர்களின் மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்கே திடீரென்று இன்னுமொரு மோட்டார் சைக்கிள் சென்றதால் நிலை குலைந்த குடும்பஸ்தர்மோட்டார் சைக்கிளை மறுபக்கம் திருப்பியுள்ளார். அதனால், அது வீதியை விட்டு விலகி இரும்புக் கம்பம் ஒன்றுடன் மோதியது.

இதில், குடும்பஸ்தர் தலையில் படுகாயமடைந்தார். மனைவிக்கு காயங்கள் இல்லாத போதிலும் அதிர்ச்சியடைந்தவராகக் காணப்பட்டார்.

காயமடைந்த குடும்பஸ்தர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி மரணமானார்.

இந்த விபத்துத் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-40)

## அரசியல்...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோர் கலந்துகொண்டனர்.

வள்ளுவர்புரம் புரட்சி தலைமையில் அகவணக்கம் மற்றும் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. நூலின் முதற்பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வழங்க, வடமாகாண போக்குவரத்து, மீன்பிடித்துறை அமைச்சர் டெனீஸ்வரன் பெற்றுக் கொண்டார்.

சிறப்புரைகளை வைத்தியர் சத்தியமூர்த்தி, அமைச்சர் டெனீஸ்வரன், மன்னார் மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவகரன் ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் விமர்சன உரையைக் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் சத்தியானந்தம் நிகழ்த்தினார்.

மன்னார் மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவகரன் தனது உரையில் காரசாரமாக அரசியல் கருத்துகளை வெளியிட்ட போது வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் உரையை நிறுத்துமாறு கோர குழப்ப நிலை ஏற்பட்டது. அவர் மேடையை விட்டு வெளியேற முயன்றபோது, ஏற்பாட்டாளர்களினால் சமரசம் செய்யப்பட்டு நிகழ்வு தொடர்ந்து நடத்திச் செல்லப்பட்டது.

இந்நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

(அங்கு சர்ச்சையை ஏற்படுத்திய எஸ்.சிவகரனின் உரையின் விவரம் நாளைய 'காலைக்கதிர்' இதழில் வெளியாகும்.)

## வளலாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி ரவை 1பெட்டி (1,500), மிதிவெடி 02 என்பனவே மீட்கப்பட்டவையாகும்.

நேற்றுக் காலை காணி உரிமையாளர் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது நிலத்தில் புதையுண்டிருந்த இரும்புப் பெட்டி ஒன்றைக் கண்டார். அதை எடுத்துத் திறந்து பார்த்த போது அதற்குள் மேற்படி வெடி பொருட்கள் காணப்பட்டன.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் அவற்றை மீட்டுச்சென்றனர். நீதிமன்ற உத்தரவைப் பெற்று இவை அழிக்கப்படும் என்று பொலிஸார் கூறினர். (ம-09)

## அரச முகாமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் பணிப்பாளர் நாயகம் கே.வி.பி.எம்.ஜி.கமகே இது தொடர்பாக தகவல் தருகையில் இதற்கான வர்த்தமானி அறிவிப்பு அடுத்த மாதம் வெளியிடப்பட இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் மேலும் 1595 பேர் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15ஆம் 16ஆம் 18ஆம் திகதிகளில் அமைச்சில் நடைபெறவுள்ளது.

2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரங்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

## ஒற்றையாட்சியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதி மீளத் தெரியப்படுத்தியிருந்தார்.

புதிய அரசமைப்பில் 'ஒற்றையாட்சி முறைமையும் இல்லை; சமஷ்டியும் கிடையாது' என்ற ஒரு தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கருத்துவெளியிட்டு வருகின்றார் என அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

அரசமைப்புத் தயாரிப்பு விவகாரங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட தமிழர் தரப்பும் இதனை உறுதி செய்தன.

'சமஷ்டி ஆட்சி முறைமை' என்ற சொல் உத்தேச புதிய அரசமைப்பு நகலில் இருக்காது. அது உண்மைதான். ஆனால் சமஷ்டிப் பண்பியல்புகளை முழுமையாகக் கொண்டதாகவே புதிய அரசமைப்பு அமையும் என நாம் உறுதியாக நம்புகின்றோம். - என்று அந்த வட்டாரங்கள் காலைக்கதிருக்குத் தெரிவித்தன.

## மல்லாவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மல்லாவிப் பகுதியில் தனது வயலில் வேலை செய்து கொண்டிருந்த திருநகர் மல்லாவியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தம்பிமுத்து ஞானேஸ்வரன் (வயது- 62) என்ற விவசாயியே இவ்வாறு பலியாகியுள்ளார்.

இவரது சடலம் மல்லாவி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பிலான விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அவருடன் வயலில் வேலை செய்து கொண்டிருந்த மற்றுமொரு விவசாயியான வளநகர் மல்லாவியைச் சேர்ந்த செல்லையா வசந்தகுமார் (வயது 55) என்பவர் காயமடைந்த நிலையில் மல்லாவி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## ஆளுநருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"கடிதம் எனக்கு எழுதப்படவில்லை. மேற்படி கோரிக்கைக் கடிதம் வடமாகாண ஆளுநருக்கே முகவரி இடப்பட்டுள்ளது. எனக்கு அதன் பிரதி ஒன்றே தகவலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

"சபையில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற சம்பிரதாய அங்கீகாரத்தை யாருக்கு வழங்குவது என்பது சபைக்கு - சபை முதல்வர் என்ற வகையில் எனக்கு - உரிய விடயமாகும்.

"எனக்கு எழுதப்படாத கடிதம் குறித்து நான் சிரத்தை எடுக்கத் தேவையில்லை.

இந்த விவகாரம் ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல. அதனை நான் அவருக்கும் தெரியப்படுத்துவேன்." - இப்படி சபை முதல்வர் சிவஞானம் காலைக்கதிருக்குத் தெரிவித்தார்.

"ஐ.ம.சு. கூட்டமைப்பின் செயலாளர் இந்த விடயத்தில் உங்களை நேரடியாக விளித்து உங்களுக்குக் கடிதம் அனுப்பினால் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?" - என்று அவரிடம் கேட்டபோது -

"அப்படி ஒரு கடிதம் வந்தால் அப்போது அதுபற்றி பார்த்துக் கொள்ளலாம்" - என்று பதிலளித்தார் பேரவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

## தென்னை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று முறிந்து வீழ்ந்ததால் அந்த வீதியூடான போக்குவரத்துக்கள் நேற்றிரவு தடைப்பட்டன. அத்துடன் சில பிரதேசங்களுக்கான மின்சாரமும் தடைப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை காலை தொடக்கம் மேற்படி பிரதேசத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்த நிலையில், இரவு 7 மணியளவில் குறித்த தென்னை மரம் முறிந்து மின்சாரக் கம்பிகள் மீது வீழ்ந்ததால் மின்கம்பிகள் அறுந்து தொங்கின. நீண்ட நேரமாகியும் மின் விநியோகம் துண்டிக்கப்படவில்லை.

இதனால், அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது. அங்கு நின்ற சில இளைஞர்கள் வீதியால் சென்ற வாகனங்களை மறித்து மாற்றுப் பாதைகளூடாக அனுப்பி வைத்தனர்.

இதேவேளை, மழையுடன் கூடிய காற்றுக் காரணமாக தொலைக்காட்சிக் கேபிள் வயர்களும் அறுந்து தொங்கிக்கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. இதனால் அச்சுவேலி, ஆவரங்கால் போன்ற இடங்களில் தொலைக்காட்சி சேவைகளும் பாதிக்கப்பட்டன. (ம-09)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.